Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 339 மார்கழி. December 2024

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

30TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien & Schmuck
34 ஆவது ஆண்டு நிறைவு

தரமும், மலிவும், ஒரே இடத்தில்
Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# மக்கள் ஆதரவைத் தக்கவைப்பதற்கு தமிழ்க் கட்சிகளின் உபாயம் என்ன?

கொழும்பிலிருந்து பா.பார்த்திபன்




அனைவருக்கும் எமது
இனிய நத்தார் புதுவருட
வாழ்த்துகள்

புத்தாண்டில் புது மனிதன்

இதழ்: 339




சிறந்த அச்சு ஊடக விருது 2024



Dr.IN

யேர்மனியில் திருவள்ளுவர்
சிலை திறப்பு விழா 07.12.2024
Dortmund








# வில்லனாக இருந்த கணப்பொழுது

மூன்று மாடிகொண்ட வீடு. பொதுவாக வெளியில் 2 குப்பை வாளி. இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை நகரசபை பணியாளர்கள் வந்து எடுத்துசெல்வார்கள். பல தடவைகள் காகிதங்கள் போடவேண்டிய வாளியில் பிளாஸ்டிக் போத்தல்கள், பெட்டிகளும், பிளாஸ்டிக் போட வேண்டிய வாளியில் காகிதமும் போடுவார்கள். அது மட்டுமல்ல வாளியின் மூடியை திறந்து அதற்குமேல் விறகு அடுக்குவது போல் அடுக்குவார்கள். காற்றடித்தால் தெருவில் அவை பறந்து விளையாடும்.

வீட்டுக்குள் நின்று கேட்டால் முன்பு பாடசாலைகளுக்கான உதைபந்தட்டத்தில் வெற்றி பெற்றால் வானில் தகர பேணிகளை கயிற்றில் கட்டி வானில் வால் போல விட்டு தகர டப்பா சத்தம் கேட்க தெருவீதியில் ஒடுவோமே! அதே சத்தம் இப்ப இங்கேயும் கேட்கும்.





மாதவி

வீட்டின் உள்புற, வெளிப்புறம் சுத்தமாக்கலுக்கு என்று மாதம் 75 பவுண் Management. க்கு கட்டுவோம். அதனால் பல தடவை குப்பைவாளியின் மேல் குப்பைபோடும் குப்பைகளை படம் எடுத்து அவர்களுக்கு நானும் அனுப்புவேன்.

அவர் அவர்களாக பார்த்து திருந்தாவிட்டால் இதனை ஒழிக்க முடியாது என்று. இறுதியில் புரிந்து கொண்டேன். குப்பைவாளியின் மேல் வழிய வழிய குப்பை போட்டால், தவறாக போட்டால் நானே தனித்து ஒழுங்கு செய்வேன். இப்படி ஒருவருடமாக நான் சுத்தம் செய்து வர, இப்போது என்னைக்கண்ட பலர் தாமாக ஒழுங்காக போடுகிறார்கள்.

அப்பாடா என்று இருக்க இன்று Management இல் இருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் வீட்டில் முன் உள்ள பொது இடத்தில் சையிக்கிள் விடுகிறார்கள். அப்படி விடவேண்டாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சும்மா நான் குறை கண்டாலே பொங்க எழுவேன், கடிதமும் கையில் இருந்தால் கேட்கவா வேண்டும். காற்சட்டையை மேலே இழுத்து விட்டுக்கொண்டு விஜய் சேதுபதி விக்ரமில் நடந்ததுபோல் சையிக்கிள் யார் விட்டது என பார்க்கப்போனேன். உறங்கிக்கிடந்த வில்லத்தனம் இந்த வயதிலும் உசுப்பேத்தி நடக்க வைத்தது. கதவை திறந்து வெளியில் வீட்டுக்குள் வரும் பொது வாசல் வரை போனேன். பார்த்தேன் கோவம் காத்து திறந்துவிட்ட சையிக்கிள் போல் ஆனது.

எனக்குள் இருந்த வில்லன் மறைய, என்னிடம் இருந்த மனிதம் வெளியே வந்து சையிக்கிளை தொட்டு இரசித்து. சில நேரங்களில் சட்டத்தை கண்டும் மகிழ்வோடு கடப்பதும் உண்டல்லவா. அந்த ஐந்து வயது சிறுவன் வீட்டுக்குள் அடைபட்டு இருக்காது வெளியில் வெய்யில் நேரம் மட்டும் ஓடும் அந்த சிறு சையிக்கிள் தான் மூலையில் கிடந்தது.


அதனை அவனால் அல்லது தனித்து வாழும் தாய்யாலோ ஒவ்வொரு தடவையும் மூன்றாமாடிக்கு எடுத்து செல்ல முடியாது அல்லவா. கணனியில் அமர்ந்து மின்னஞ்சல் அனுப்புகிறேன். அந்தச் சிறுவனுக்கு சையிக்கிள் விட ஒரு இடம் ஒதுக்கிதரவும். யப்பானில் ஒரு மாணவிக்காக ஒரு ரெயின் ஓடியது என்றால் இங்கு இதுவும் சாத்தியம் அல்லவா.



வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 339



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# மக்கள் ஆதரவைத் தக்கவைப்பதற்கு தமிழ்க் கட்சிகளின் உபாயம் என்ன?

பா.பார்த்திபன்

இலங்கையின் அரசியல் போக்கையே மாற்றியமைக்கும் வகையிலான நிகழ்வுகளுடன் நவம்பர் மாதம் முடிவுக்கு வருகின்றது. மக்களின் தீர்ப்பினால், அரசாங்கம் மாறியிருக்கும் அதேவேளையில், தமிழ்த் தரப்புக்கும் இத் தேர்தல் பெரும் அதிர்வுகளைக் கொடுத்திருக்கின்றது.

இந்த அதிர்வுகளுடன், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் சில உண்மைகளை வெளிப்படையாகப் பேசத் தொடங்கியிருக்கின்றார்கள். தமிழ்த் தரப்புக்கள் தமது பயணத்தை ஒரு புதிய பாதையில் தொடர வேண்டிய தேவையை தேர்தல் முடிவுகள் தெளிவாக உணர்த்தியிருக்கின்றது.



வட மாகாணம் அநுரகுமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் வசமாகியிருக்கின்றது. இலங்கையின் வரலாற்றில் தமிழ்க் கட்சிகளின் கைகளிலிருந்து வடபகுதி பறிபோயிருப்பது இதுதான் முதல் தடவை. தமது பின்னடைவுகளுக்கு என்ன காரணம் என்பதை அவர்கள் சுயபரிசோதனை செய்து புதிய உபாயங்களுடன், புதிய பாதையில் பயணிக்காவிட்டால், மேலும் வடமாகாண சபையையும் பறிகொடுக்க வேண்டியிருக்கும்.

தேர்தல் முடிவுகளிலிருந்து பல பாடங்களை தமிழ்த் தரப்பினர் படிக்க வேண்டியுள்ள அதேவேளையில், எதிர்காலத்துக்கான திட்டமிடலும் அதிலிருந்தே ஆரம்பமாக வேண்டும். இல்லையெனில் இன்னும் கடினமான பாடங்களை படிக்க வேண்டியிருக்கும்.

வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றிக்கு, அவர்கள் டக்ளஸ் தேவானந்தா மற்றும், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் வாக்கு வங்கிகளை தேசிய மக்கள் சக்தி தம்வசப்படுத்தியதே காரணம் என்பதை புள்ளிவிபரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

2020, மற்றும் தற்போதைய (2024) தோ்தலின் முடிவுகளை ஆராயும் போது இதனை அவதானிக்க முடியும். 2020 பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் டக்களஸின் ஈ.பி.டி.பி. பெற்ற மொத்த வாக்குகள் 45,797. ஆனால், இப்போது, 17,730 வாக்குகளை மட்டுமே பெற்றிருக்கின்றது. அதாவது சுமார் 28 ஆயிரம் வாக்குகளை ஈ.பி.டி.பி. நான்கு வருடங்களில் இழந்துவிட்டது.

அதேபோல 2020 பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாழ். தேர்தல் மாவட்டத்தில் பெற்ற வாக்குகள் 49,373. யாழ். மாவட்டத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக அப்போது சுதந்திரக் கட்சி வந்திருந்தது. சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் யாழ்ப்பாணத்தில் அதற்கு ஒருபோதுமே இடமிருந்ததில்லை. அங்கஜனின் தனிப்பட்ட முறையில் மேற்கொண்ட பரப்புரைகளால், அவருக்காகக் கிடைத்த வாக்குகள் தான் அவை. இப்போது, சுதந்திரக் கட்சி நீதிமன்றத்தில் நிற்கிறது. அந்தக் கட்சி தேர்தலில் போட்டியிடவில்லை. மற்றொரு





கட்சியான ஜனநாயக தேசிய முன்னணியில் இணைந்து அங்கஜன் இராமநாதன் போட்டியிட்டார். இதன்போது அவருக்குக் கிடைத்த வாக்குகள் 12,427. அதாவது சுமார் 38 ஆயிரம் வாக்குகளை அவர் இப்போது இழந்திருக்கின்றார்.

டக்ளஸ் தேவானந்தாவுக்கும், அங்கஜன் இராமநாதனுக்கும் கிடைத்த வாக்குகள் நிரந்தரமானவை அல்ல என்பது இந்தத் தேர்தலின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவர்கள் அப்போதைய அரசாங்கத்துடன் நெருக்கமானவர்களாக, அடுத்து வரக்கூடிய அரசில் அமைச்சர் பதவிகளை எடுக்கக்கூடியவர்களாக இருந்ததால் அப்போது அந்தளவு வாக்குகுள் அவர்களுக்கு கிடைத்தது.

அந்த வாக்குகள் இப்போது முழுமையாக தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரும்பியிருக்கின்றது. இதனை புள்ளிவிபரங்கள் உணர்த்துகின்றன. தேசிய மக்கள் சக்தி இப்போது யாழ். மாவட்டத்தில் பெற்ற வாக்குகள் 80,830.

டக்ளஸ், அங்கஜன் ஆகிய இருவரும் கடந்த தேர்தலுடன் ஒப்பிடும் போது இம்முறை சுமார் 70 ஆயிரம் வாக்குகளை இழந்திருக்கின்றார்கள்.

அவை தேசிய மக்கள் சக்தியின் வசம் சென்றிருக்கின்றது. தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணத்தில் கிடைத்துள்ள இந்த 80 ஆயிரம் வாக்குகள் நிரந்தரமானவை அல்ல என்பதையும் இச்செய்தி உணர்த்துகின்றது.

18 ஆம் பக்கம் பார்க்க...




ஐரோப்பாவில் முதன்முறையாக......
மக்கள் நடமாட்டமும் பல்வேறு வணிக நிறுவனங்களும் கொண்ட
முதன்மைமிக்க பெருவீதி ஒன்றில்.....
யேர்மனியின் டோட்முண்ட் மாநகரில்....
வீற்றிருக்க வருகிறார்
எங்களின் ஐயன் திருவள்ளுவர்!
07.12.2024 சனிக்கிழமை 11 மணி
இடம்: திருவள்ளுவர் சந்தி
Rheinische Straße
44137 Dortmund
அனைவரும் வருக!!!
பெருமகிழ்வுடன் கொண்டாடுவோம்!!!

# 'போலச் செய்தல்': கலையின் உயிர் சிதைக்கும் AI
# ஆற்றுகை இல்லாதது கலையாகாது!


ரூபன் சிவராஜா
(நோர்வே)

அண்மையில் இரவிவர்மாவின் அடையாளமாக விளங்குகின்ற அவரின் சில ஓவியங்களை செயற்கை நுண்ணறிவின் (AI) மூலம் அசையும் படங்களாக மாற்றிய காணொளி ஒன்று சமூக ஊடகங்களில் உலவித்திரிந்தது.

'Ravivarmas Painting comes to life with AI-Technology' என்ற கூற்றுடன் அக்காணொளி உலவித் திரிந்தது. செயற்கை நுண்ணறிவை எதற்குப் பயன்படுத்துவதென்ற விவஸ்தையில்லாத போக்கினையே இதுவும் இதுபோன்ற காரியங்களும் வெளிப்படுத்துகின்றன.



### ஓவியத்தின் உயிர் 'அசையாமை'

ஓவியத்தின் உயிர் 'அசையாமை'யிலும் படிமத்தோற்றத்திலும் தங்கியுள்ளது. ஓவியத்தின் அசையாத்தன்மை மனதை அசைக்கிறது, மனதிற்குள் அதன் காட்சிகளை அசைக்கிறது. மனங்களை அசைப்பது மட்டுமல்லாமல் மனச் சிறகுகளையே விரிக்கவைக்கக்கூடியது. அதுதான் ஓவியக் கலையின் அடிநாதம்.

உண்மையில் இது யாரோ ஆர்வக்



கோளாறில் செய்த செயல். இது குறித்துப் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லைத்தான்.

கலை என்றால் அங்கு ஆற்றுகை இருக்க வேண்டும்.

ஒரு முறை மேடை நிகழ்ச்சி ஒன்றில் இளையராஜா – யுவன் சங்கர் ராஜாவுக்கு இடையில் நடந்த உரையாடற் காணொளி ஒன்று காணக் கிடைத்தது. அதில் தனக்கு ஏதாவது ஆலோசனை சொல்லவேண்டுமென்றால் என்ன சொல்வீர்கள் என இளையராஜாவை யுவன் கேட்கின்றார். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்கச் சொன்னதாகவும் சொல்கிறார். அதற்கு இளையராஜா பார்வையாளர்களை நோக்கிச் சொல்கிறார்:

'நீங்கள் எலக்ரோனிக் மியூசிக் தான் கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். அதனால் மூளைக்கலங்கள் (Brain cells) சரியான முறையில் செயற்படாது. இலத்திரனியல் இசையால் மூளையின் கலங்கள் மந்தமாக்கப்படும். கலை என்றால் அங்கு ஆற்றுகை இருக்க வேண்டும். ஆற்றுகை இல்லாதது கலையாகாது. புரோக்கிராமிங்கைத் தவிருங்கள்'

இது யுவனுக்கு மட்டுமல்ல. இன்றைய இசையமைப்பாளர்களில் பெரும்பாலானவர்களை நோக்கிச் சொன்ன விடயம். Live instruments என்று சொல்லக்கூடிய அசல் இசைக் கருவிகள் கலைஞனின் கைகள் தொட்டும் – தாள வாத்தியங்கள், ஏனைய ஊது இசைக் கருவிகள் மனிதனால் மீட்டப்படும்/இசைக்கப்படும் போது உருவாகும் இசை மனதைத் தொட்டு, ஊடுருவி, உணர்வு நரம்புகளை இயக்கக்கூடியது.

### போலச் செய்தல்

உலகளாவிய தமிழ்ச் சூழலிற் கலையெனும் பேரிற் போலச் செய்தலே அதிகரித்து நிற்கின்றது. தொலைக்காட்சிகள், கலை நிகழ்வுகள் எதுவும் இதற்கு விதிவிலக்கில்லை. 'கலைசார்' முன்னெடுப்புகளைப் பொறுத்தவரை தமிழகச் சினிமாவும் அதன் பாடல்களும் பெரும் ஆதி க்கம் செலுத்துகின்றன. நிகழ்வுகளில் தனித்துவமானதும் புத்தாக்கமானதுமான சில அரங்க ஆற்றுகைகள், நடனங்கள், நடன நாடகங்கள், நாடகங்கள் ஆங்காங்கே படைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் சினிமாவின் பாதிப்பே கலை நிகழ்த்துகைகளின் பெரும்போக்காகவும் பெரும்பான்மையினரின் இரசனைக்குரியனவாகவும் உள்ளன. திரைப்பட முயற்சிகளும் சிறிய அளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றிலும் பெரும்பான்மையானவை தமிழகச் சினிமாப் பாணியின் தத்தெடுப்புகளே.

மக்களின் ரசனையும் கீழிறங்கிக் கொண்டிருக்கின்றது. 'போலச் செய்தல்' என்பதற்கே முன்னுரிமை. சினிமாப் பாடல்களை மேடைகளிற் பாடுவது, சினிமாப் பாடற் போட்டிகளை நடாத்துவது, சினிமாப் பாடல்களின் கரோக்கே இசையில் பாடுவது, சினிமாப் பாடல்களுக்கு நடனமாடுவது, சினிமாக்காரர்களைப் போலப் பேசுவது (Mimicry), சினிமாக் காட்சிகளை நடிப்பது எனவாகப் போலச் செய்தலின் பட்டியல் நீளமானது. போலச்செய்தல் என்பது திறன் சார்ந்த அம்சம். அது படைப்பாக்கம் சார்ந்த விடயம் அல்ல.

### கலைக்கும் இரசனைக்கும் வேட்டு வைக்கும் AI

செயற்கை நுண்ணறிவு பல துறைகளிலும் தவிர்க்க முடியாத தொழில்நுட்ப வளர்ச்சியாக உருவெடுத்து நிற்கின்றது. பல தளங்களில் அதன் பயன்பாடு நேர்மறை விளைவைக் கொடுக்கிறது.




பல துறைகளிலும் அதன் பயன்பாடு எதிர்மறையானது. திரைப்படங்களிலும் இந்தத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அண்மையில் வெளிவந்து GOAT படத்தில் வயதுகுறைத்தல் (de-aging) என்ற பேரில் ஏதோ வெல்லாம் கோமாளித்தனம் செய்திருந்தார்கள். எந்தவொரு தொழில்நுட்பமும் உரிய அளவில், உகந்த முறையில், கலைப் படைப்போடு இணையவேண்டும். அப்போதுதான் அந்தப் படைப்பின் தரத்திலும் அது பார்வையாளர் மனதில் ஏற்படுத்தும் தாக்கத்திலும் நேர்மறையான பங்காக அது அமையும். இல்லையேல் படைப்பாக்கத்தின் உயிரைச் சிதைத்துவிடும். அதற்கு தொழில்நுட்பத்தைக் கலைப்படைப்போடு இணைப்பதற்கு நுணுக்கமான கலைத்துவ, அழகியற் பார்வை அவசியமானது.

காலப் போக்கில் இந்த AI கலைப் படைப்புகளுக்கும் கலை இரசனைக்கும் பெரிய வேட்டுவைக்கப் போகின்றது என்றும் தோன்றியது. மறைந்த புகழ்பெற்ற பாடகர்களின் குரல்களை AI மூலம் மீளுருவாக்கம் செய்யத் தொடங்கியுள்ளனர். ஒரிரு முறை செய்வது அவர்களை நினைவுகூர்வதாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இதுவே ஒரு பொதுவானதும் பரவலானதுான போக்காக ஆகிவிடுகின்ற ஆபத்துகள் உள்ளன.

கலை என்பது ஒரு மனதை இன்னொரு மனதுக்குக் கடத்துகின்ற ஊடகம். கலைப் படைப்பு அடிப்படையில் மனம் சார்ந்தது. ஆழ் மன உணர்விலிருந்து பிறப்பது. எந்தக் கலையும் ஆற்றுகை செய்யப்பட வேண்டியது




merry Christmas
AND
2025
HAPPY NEW YEAR
Luckyfly
SRI LANKA
Summer 2025
DREAM VACATION
AB 1080 €
0234 2399032
0179 14 84892
info@lucky-fly.de | www.lucky-fly.de
BOOK NOW




# சஜித் பகீரதன் இயக்கிய 'Mind Never Dies'




## 'அமரர் ரமேஷ் வேதநாயகம்' அவர்களின் ஆவணப் படம் மூன்று தளங்களில் வெற்றித்தடம் பதித்தது!



இங்கிலாந்தில் லண்டன் மாநகரில் வசித்து வந்தவர் ரமேஷ் வேதநாயகம் அவர்கள். இவர் ஆகஸ்ட் 23, 1962 இல் இந்தியாவில் பிறந்தார். அவர் ஒரு சிறந்த நடிகர், மணிகண்டன் இயக்கத்தில் 'சிக்குப் புக்கு' 2010 இல் வெளிவந்த படத்திலும், கார்த்திக் சுப்பராவ் இயக்கத்தில் வெளிவந்த 'ஜகமே தந்திரம்' படத்தில் சிறு பாத்திரத்தில் நடித்தார். (2021) (The Family Man )தி ஃபேமிலி மேன் (2019) மற்றும் அண்டாஸ் தேரா மேரா (Andaz Tera Mera ) (2023) ஆகிய படங்களில் நடித்தார்.

ரமேஷ் வேதநாயகம் தன்னைப்பற்றி இணையத்தளத்தில் பதிவுசெய்திருந்த தகவல் இவை:

'சிறு வயதிலிருந்தே எனக்கு ஒரு திரைப் படம் அல்லது அது போன்ற தயாரிப்பில் நடிக்க வேண்டும் என்ற லட்சியம் இருந்தது. உலகளாவிய பார்வையாளர்களுக்கு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்ற தாகம் எனக்கு எப்போதும் உண்டு. எனது நடிப்புத் திறமையால் மக்களை அழவும் வைத்தது, ஆனால் சிரிக்கவும் வைத்தது, பயத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. நான் ஒரு திரைப்படம் அல்லது டிவி சீரியலை பார்க்கும் போதெல்லாம், நான் அதை ரசிப்பேன், ஆனால் அதே நேரத்தில் அந்த கதாபாத்திரத்தின் பாத்திரத்தில் நான் ஏன் நடிக்கக்கூடாது? என்றும் எண்ணுவேன். நான் தமிழ், ஆங்கிலம் இரண்டும் பேசுவேன்.'

இவ்வாறு அப்பதிவு இருந்தது. இதில் இருந்து அவர் நடிப்பு மீது வைத்திருந்த பேரார்வம் தெரிகிறது. தீபம் தொலைக்காட்சியில் பல நாடகங்களில் நடித்து பலரது மனங்களையும் கவர்ந்தவர் தான் ரமேஷ் வேதநாயகம். அவர் அக்டோபர் 22, 2023 அன்று லண்டனில் இறந்தார்.



அவர் அன்று நோயினால் பீடிக்கப்பட்டு, இறுதிக்காலத்தை நெருங்கிய நேரம், அவரை சஜித் பகீரதன் முதல் முறையாகச் சந்தித்தார். அவரது கலையார்வத் தால் ஈர்க்கப்பட்ட சஜித் அந்த மாபெரும் கலைஞனின் சிறப்பை வாழும்போதே ஆவணப்படுத்த முயன்றார். MND MOTOR NEURON என்னும் ஒரு வகை நரம்பு நோயினால் தாக்கப்பட்டு தலைக்கு கீழ்வரை இயக்கம் இல்லாது இருந்த வேளையிலும், தனது கலையார்வம் குறையாது ஒரு ஆவணப்படத்தை இயக்க அதற்கு ஒத்துழைக்க ஒத்துக்கொண்டார்.

அவரது மனைவி தேனீர் கொண்டு வந்து அவருக்கு கொடுக்க ஒரு ஸ்ட்ரா (Straw) வால் உறுஞ்சிக் குடித்தார். அப்போது அவர் மனைவியிடம் இவரை நடிகர் என்று அறிந்துதான் திருமணம் செய்தீர்களா என்றகேட்க. அவர் மனைவியோ ஐயோ நான் அறிந்திருந்தால் கட்டியிருக்க மாட்டேன் என்று சொல்ல. இறப்பின் விழிம்பில் இருந்தும் ஒரு காதல் பார்வையைத் தன்மனைவி மீது வீசுகிறார்.

அதனை அப்படியே சஜித் படமாக்கினார். சில நாட்களின் பின் மரணம் அடைந்தார்.

இன்றும் என்றும் வாழும் கலைஞனான அவரைத்தேடி Kollywood, Kodaikanal, இராமேஸ்வரம்,மூன்று இடங்களிலும் இந்த ஆவணப்படம் 'Mind Never Dies' (Documentary film) முதல் இடத்தைப்பெற்று அதற்கான உயர் சான்றிதழையும் பெற்றுக்கொண்டது.

ஒரு கலைஞனின் உள்ளக்கிடக்கைகளை வெளிக்கொண்டுவந்து ஆவணப்படுத்தியவர், இங்கிலாந்தில் வசிக்கும் ஈழத் தமிழரான இளைஞன் சஜித் பகீரதன். இவர் 17 வருடங்களுக்கு முன்பே தனது 12ஆவது வயதிலேயே குறும்படங்களை இயக்க ஆரம்பித்தார்.



இன்று திரைக்கலை இளையவர் கைகளுக்கு சென்றுள்ளது. நவீன தொழில் நுட்பங்களை சட்டென உள்வாங்கும் திறன் இளையவர்களுக்கு அதிகம். காலத்துக்கு ஏற்ப கதை சொல்வது, காட்சிப்படுத்துவது யாவுமே இன்று வேறு விதம். கொஞ்சம் நீண்டாலே கதிரையை விட்டு இறங்கிவிடுவார்கள்.

சஜித் பகீரதன் லண்டன் TBB Entertainment. இணைந்துதனது இசைக்கான பயணத்தை ஆரம்பித்தார். அதற்கு வெற்றிமணி பத்திரிகையும், TBB உம் களம் அமைத்து கொடுத்தது. தென்னிந்திய பாடகர்கள் காற்றின் மொழி பாடல் புகழ் பல்ராம், மாதங்கி இவர்களுடன் இணைந்து பாடும் வாய்ப்பினையும்




பெற்றார். யேர்மனியில் வெற்றிமணி விழாக்கள் பலவற்றிலும் கலந்துசிறப்பித்தார். தமிழகம் சென்று திரைப்பட நுணுக்கங்களையும் கற்று, TBB தயாரிப்பான 'வடபழனி குறுக்குத்தெரு" குறும்படத்தை இயக்கினார். அந்த அனுபவத்தினால் 'மாயவலை' என்ற குறும்படத்தை சிறப்பாகத் தந்தார்.

பாடல், குறும்படம் இசை என இருந்த சஜித் பகீரதன், முதிர்ச்சி பெற்ற கலைஞர்களின் அர்ப்பணிப்பான சேவைகள் அவர்கள் மறைவோடு மறைந்துபோகும் தன்மை கண்டு, தன் ஆற்றலை ரமேஷ் வேதநாயகம் அவர்கள்பால் செலுத்தினார். 12 நிமிடம். வரை நீளமான ஆவணச் சித்திரம் ஒக்ரோபர் அவரது ஒரு வருட நினைதினத்தில் வெளியானது. ' Mind Never Dies' (Documentary film) மறைந்த பின்பும் மறையாத அவர் உணர்வுகளைப் பதிவுசெய்த,

**இளம் கலைஞர் சஜித் பகீரதனுக்கு வெற்றிமணியின் வாழ்த்துக்கள்.**



அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்




# யேர்மனியில் இருந்து வெளிவரும் வெற்றிமணி பத்திரிகைக்கு ஐரோப்பா ரீதியாக சிறந்த அச்சு ஊடகத்துறைக்கான விருது

## UK Awards tamil 2024






யேர்மனியில் முப்பது வருடங்களுக்கு மேலாக வெளிவரும் மாதாந்தப் பத்திரிகை “வெற்றிமணி“பத்திரிகையாகும்.

இதற்கு வாசகர்கள் மத்தியில் பெரும் ஆதரவு உண்டு. இதன் தரமே இதற்கு முக்கிய காரணமாகும். இந்தப் பத்திரிகை அழகான படங்களுடன்,பளபளப்பான பக்க ங்களுடன் ,எழுத்தாளர்களின் சிறந்த ஆக்கங்களைக் கொண்டு ஒவ்வொரு மாதமும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி சகல கடைகளிலும் கிடைக்கும். இலவசப்



பத்திரிகை “வெற்றிமணி“யாகும்.32 பக்கங்களுடன் தொடர்ந்து வெளிவருகின்றது. முதல் பக்கத்தைப் பார்த்தவுடன் கையில் எடுத்துப் பார்க்க வேண்டுமென்கிற ஆவலைத்தூண்டும் அழகான படங்களுடன் கடந்த முப்பது வருடங்களாக,தமிழர்கள் வாழும் பெரும்பாலான புலம்பெயர் நாடுக ளில் தன் புகழைப் பரப்பி வருகிறது. சிறந்த எழுத்தா ளர்களை உருவாக்கி இலக்கிய உலகத்திற்கு அளித்த பெருமை இந்தப் பத்திரிகைக்கு உண்டு.



பொன் புத்திசிகாமணி
(யேர்மனி)

சிறந்த அச்சு ஊடகத்திற்கான யூகே அவாட்ஸ் தமிழ் 2024 ஐரோப்பா ரீதியாக “வெற்றிமணி“பத்திரிகைக்கு 02.11.2024 வழங்கப்பட்டிருக்கிறது. இந்த விருதை அன்றைய தினம் வெற்றிமணி பிர தம ஆசிரியர் திரு மு.க.சு சிவகுமாரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில் மேலும் பல் துறை சார்ந்த பலருக்கும் முறையே,வாழ்நாள் சாதனையாளர் விருதுகள்,மாணவர்களுக்கான விருதுகள்,ஊடகங்களுக்கான விருதுகள் எனப்பலதுறைகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கட்டன.


ஊடகத்துறையில் தன் வாழ்நாளில் பெரும் பகுதியை அர்பணித்த லண்டன் புதினம் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் திரு ராஜகோபால் அவர்கள் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றுக் கொண்டார்.




எந்த சொற்பொழிவுகளும் இன்றி நிகழ்வு,மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.ஒவ்வொரு பரிசுக்குரியவர்க ளின் விபரங்கள் திரையில் காட்டப்பட்டது. தரமான விருந்து.இந்தத் தமிழர் விருது இனிவரும் காலங்களில் இங்கிலாந்து அரசாங்கத்தின் விருதாக வழங்குவதற்கு விழாக்குழு முயற்சிக்க வேண்டுமென்கிற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது.

**விருது பெற்ற அனைவருக்கும் எங்கள் வாழ்த்துகள்.**

## விழாவில் விருது பெற்ற சில ஆளுமைகளுடன்...



திரு பத்மநாபன் ஐயர் அவர்களுடன். பல நூல்களை வாசித்தும், இணையத்தில் (நூலகம்) ஏற்றி பாதுகாக்க உதவும் சிறந்த மனிதருடன்.



ஊடகத்துறையில் நீண்டகாலம் நிலைத்துநின்ற புதினம் திரு. ராஜகோபால், ராகினி ராஜகோபால் இவர்களுடன்



கண்ணாடி வார்ப்புகள் முதல் இன்றுவரை தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம் மூலம் காத்திரமான பல படைப்புக்களைத் தரும் திரு க.பாலேந்திரா அவர்களுடன்.






# குறைந்த அளவிலான பக்கவாதம்

**கேள்வி:** எனது தந்தைக்கு 65 வயது. கடந்த வாரம் வரை அவருக்கு பெரிதாக காய்ச்சல் வந்துகூட நான் பார்த்ததில்லை. ஆனால் கடந்த வாரம் திடீரென்று மயங்கி விழுந்துவிட்டார். நாங்கள் உடனே வைத்தியரிடம் அழைத்துச் சென்றோம். வைத்தியர் இரத்த அழுத்தம் காரணமாகவே மயங்கி விழுந்தார் என கூறினார். தற்போது எனது தந்தைக்கு வலது கையும் வலது காலும் பலமில்லாமல் இருப்பது போல் கூறுகின்றார். அத்துடன் பேசுவதற்கும் சிரமப்படுகின்றார்.

இதற்கான காரணம் என்ன? இதை முழுமையாக குணப்படுத்த முடியுமா? யாரை அணுகி னால் முழுமையாக குணப்படு த்த முடியும்?

பதில்: அவருக்கு குறைந்த அளவிலான பக்கவாதம் வந்திருப்பதாகவே கருதுகிறேன். முழுமையான பக்கவாதம் எனில் அவரது ஒரு பக்க கையும் காலும் முழுமையாக இயங்காதிருந்திருக்கும். அதை ஹெமிபி ளிஜியா (uemiplegia) என்பார்கள்.

உங்கள் தந்தைக்கு 'வலது கையும் வலது காலும் பலமில்லாமல் இருப்பது போல்..' என்று நீங்கள் சொல்வதிலிருந்து அவை இயங்குகின்றன. ஆனால் முழுமையான பலத்துடன் அல்ல. அதாவது தசைகள் முழுமையான வீச்சுடன் செயற்பட முடியா திருக்கிறது. இதை ஹெமிபரீசிஸ் என்பார்கள். ஹெமிபிளிஜியாவில் கை கால்கள் மட்டுமி ன்றி முகத்தின் தசைகளும் பாதிப்படையக் கூடும். முகத்தின் தசைகளும் சரியான முறையில் இயங்க முடியாததால்தான் அவர் பேசுவதற்கும் சிரம ப்படுகிறார். பேசுவ தற்கு மட்டுமி ன்றி உண்பது உடுப்பது, நடப்பது, குளிப்பது, கழிப்பறை செல்வது, போன்ற பல நாளாந்த செயற்பாடுகளிலும் சுய மாக இயங்க அவருக்கு முடியாதிருக்கலாம். அவ்வாறெனில் வீட்டில் உள்ளவர்களின் உதவி பெருமளவு தேவைப்படும்.

சிகிச்சையின் முக்கிய அம்சமாக இருப்பது இயங்குவதற்கு சிரம ப்படும் பகுதிகளை மீண்டும் உறுதியா னதாக்கி செயற்பட வைப்பதுதான். உட ற்பயிற்சி (Physiotherapy) சிகிச்சை மூலம்தான் அவரை பழைய நிலை க்குக் கொண்டுவர வேண்டும். இதற்கென நீங்கள் ஒரு உடற்பயிச்சி சிகிச்சையாளரின் உதவியைப் பெற வேண்டும். அவரின் உதவி யுடன் வீட்டில் உள்ள நீங்கள் அனைவரும் இதற்கான ஒத்தாசையை வழங்க வேண்டும்.

கை கால்கள் விரல்கள் உட்பட இயங்க முடியாதிருக்கும் அவரது உறுப்புகள் அனை த்திறகும் தசைநார்களுக்கும் பயிற்சிகள் அளிக்க வேண்டும். இவை இயங்காது என்று எண்ணி அவற்றை கைவிட்டுவிட்டு மற்றப் பகுதியை மட்டும் பாதிக்கப்பட்ட உங்கள் தந்தை முயலக் கூடாது. கூடியளவு பேச்சுக் கொடுத்து அவரைப் பேச வைக்க முயல வேண்டும்.

உங்கள் தந்தைக்கு வலது கையும் காலும் பலமில்லாது இருப்பதாகக் கூறி னீர்கள். இயலாத அந்தப் பக்கத்தையே அவர் கூடியளவு உபயோகிக்க முயல வேண்டும். உதாரணமாக முகங் கழுவுவது, பல் விளக்குவது, எழுதுவது, தலை சீவுவது, உடை மாற்றுவது போன்ற அனைத்துச் செயற்பாடுகளுக்கும் இயங்குவதற்கு சிரம ப்படும் பகுதியையே முன்னுரிமை கொடுத்து பயன்படுத்த அதே போல நடக்கும்போதும் பலமற்றதாகத் தோன்றும் வலது பகுதியையே அவர் தூக்கி வைத்து நடக்க வேண்டும். இந்த சிகிச்சை முறையை (modified constraint induced therapy) எனச் சொல்வார்கள்.

இதைத் தவிர மின் தூண்டல் செய்வதும் பயன் தரும். இதை அதற்கான பயிற்சி உள்ள உடற்பயிற்சி கொடுப்பவர்தான் செய்ய வேண்டும்.

பல துணைச் சாதனங்களையும் (as sis-tive devices) தேவைக்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும். உதாரணமாக நடக்கும்போது முழங்கால் தளர்கிறது எனில் அதற்கான முழங்கால் தளைப்பட்டி (Knee brace) உதவலாம். கைத்தடி, சக்கர நாற்காலி, நடக்க உதவும் Walker போன்றவற்றையும் தேவை அறிந்து பயன்படுத்தவும்.

சில வசதிகளை வீட்டில் ஏற்படுத்திக் கொடு ப்பதன் மூலம், அவர் நாளாந்த நடவடிக் கைகளை இலகுபடுத்தவும், மற்றவர்கள் துணையை குறைத்து தன்னளவில் இயங்கக் கூடிய மனத்துணிவை வளர்ப்பதற்கும் முடியும்.


நடக்கும்போது பற்றி நடப்பதற்கு சுவர்களில் பிளாஸ்டிக் அல்லது இரும்புப் பைப்புகளை பதித்து வைக்கலாம். ரொயிலட் இருக்கை யிலிருந்து தானாக எழுவது சிரமம் எனில் சற்று உயரமான ரொயிலட் இருக்கையை வைக்க வேண்டும்.

பிரஸ் பண்ணுவதற்கு கையை அவரால் உயர்த்த முடியாவிட்டால் இடது கையைப் பயன்படுத்த வேண்டாம். பிரஸ்சை ஒரு நீண்ட குச்சியைக் கட்டி வலது கையாலேயே பிரஸ் பண்ணட்டும். இதனால் பாதிப்புற்ற தசைநார்கள் பலம் பெறும்.

பிரஸர் இருந்தால் அதற்கான மருந்தை மருத்துவரின் ஆலோசனையுடன் பயன்படுத் தவும். இதைத் தவிர இது போன்ற பிரச்சனை மீண்டும் வராதிருக்க குருதி உறை தலைத் தடுக்கும் Aspirin, clopidogril போன்ற மருந்துகளையும் கொடுத்திருப் பார்கள். அவற்றையும் தவறாது உட்கொள்ள வேண்டும்.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்







அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# இரவில் படுக்கப்போகும் போது நாளை எழுவோமோ என்ற அவநம்பிக்கை

## வயதைத் தாண்டிய மரண பயம்: நீங்கள் சந்தோமாக வாழ கற்றுக் கொள்வது எப்படி?



என்னடா வாழ்கை இது? இளமைக் காலங்களில் நாங்கள் சந்தோஷத்துக்குக் குறைவில்லாமல் வாழ்ந்தோம். அடுத்த கட்டம் ஐம்பது வயதுகளை எட்டும்போது, வாழ்கையில் செய்யவேண்டிய கடமைகளை ஓடி ஓடிச் செய்து நாங்களும் போகவேண்டிய இடமெல்லாம் போய் சுற்றித்திரிந்து உல்லாசமாக வாழ்ந்தோம். அறுபது வயதை எட்டும் போது பிள்ளைகளுக்கு வேண்டிய வாழ்கையை அமைத்துக் கொடுத்துப் பின் பேரப்பிள்ளைகளையும் கண்டுவிட்டோம். அந்த வயதில் ஆனந்தத்துக்கு அளவே இருக்காது. யாரைச் சந்தித்தாலும் நாங்கள் சந்தோஷமாக இருக்கிறோம், பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் ஆஹா ஓஹோ என்ற வார்த்தைகள். இப்படியே சந்தோஷமாக போகும் என எண்ணித்தான் காலடிகளை எடுத்துவைத்தேன் எழுபதுகளில். அங்கே தான் ஏற்படுகிறது ஐயையோ, இவ்வளவு சந்தோஷத்தையும் என் குடும்பத்தையும் விட்டு நான் செத்துவிடுவேனோ“ என்ற எண்ணம்.

சாவு என்பது வயோதிபத்துக்கு மட்டுமா வரும் வயது வித்தியாசம் இல்லாமல் எல்லாருக்கும் சாவு வந்துகொண்டுதான் இருக்கிறது. அந்தக் கதை இங்கே தேவை இல்லை. எங்களுக்குத் தேவை வயோதிப சாவுப்பயம் ஏன் என்பதுதான்.

அறுபத்தைந்து, எழுபது வயதுக்கு மேல் ஏன் அந்த எண்ணம் வருகிறது? வயது போகிறதே செத்து விடுவோமோ என்ற ஒரு பயம். இரவில் படுக்கப்போகும்போது நாளை எழுந்துவிடுவோமோ என்ற அவநம்பிக்கை. பிள்ளைகளுடன் வாழும் இந்த வாழ்க்கை, பேரப்பிள்ளைகளுடனான சந்தோஷம் எல்லாம் இழந்துவிடுவோமோ என்ற பயம். ஒரே வயதையொத்த உறவுகள் நண்பர்களுடன் கதைக்கும்போது அவர்களிடமிருந்தும் அதே கதைகளும் பயந்த பேச்சுகளுமே கிடைக்கும்.

ஒரு முதுமொழி சொல்லுவார்களே “நாளை நான் இறந்துவிடுவேன் என எண்ணிப் பயந்து இன்றைய அழகான வாழ்வின் சந்தோஷத்தை நிம்மதியை இழந்து விடுகிறோம்“ என்று. ஆம், அது நூற்றுக்கு நூறு உண்மைதான். வயது வந்தவர்கள் அப்படிதான் வாழ்வார்கள். இதற்கெல்லாம் பல பல காரணங்கள் உண்டு. நான் பல வயோதிபர்களிடம் கேட்டு அறிந்தபின்பும், என் அனுபவத்தை வைத்தும் இதை எழுதுகிறேன்.

எனக்கு அறுபத்தைந்து வயது இருந்த போது நான் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்தேன். அச்சமயத்தில் எனக்குக் கடவுள் வைச்சான் ஓர் ஆப்பு. நெஞ்சு வலி என்னும் உயர்திரு நோய் ஏற்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுபோய் அதற்குரிய வைத்தியம் செய்யப்பட்டு வீடும் திரும்பிவிட்டேன்.



பாக்குப் பாட்டி (யேர்மனி)

அன்று தொடங்கியது என் பயம். வாய்வு தொல்லையால் என் நெஞ்சில் வலி ஏற்பட்டாலோ அல்லது எலும்பு தேய்வனவுகளால் நோ ஏற்பட்டாலோ உடனே என் மனம் பதற்றம் அடையும். நான் நெஞ்சடைப்பு வந்து இறந்துவிடுவேன் என்ற எண்ணம் ஏற்பட்டுவிடும், அதனால் இரத்த அழுத்தம் கூடும், பயம் ஏற்படும். இதனால் ஒரு சில தடவைகள் அம்புலன்ஸ் அழைத்து வைத்தியசாலைக்குச சென்றும் வந்துள்ளேன். அப்படி வரும் என் வருத்தத்துக்குப் பெயர் இதய அடைப்பு அல்ல பானிக் அட்டாக் என்பதே. இந்தப் பெயர் கொண்ட வருத்தம் வயோதிபர்களுக்கு மட்டுமில்லை இளையோருக்கும் வருவது உண்டு.

இதே சமயம் வயது வந்தவர்களுக்கு மரணபயம் ஏற்படுவதின் இன்னொரு முக்கிய காரணம், எனது வயது எழுபது. என் வயதை ஒத்தவர்கள் திடீரென இறந்துவிட்டால் அதுவும் இரண்டு மூன்று வயது குறைந்தவர்கள் இறந்துவிட்டால் வயோதிபம் தலை தூக்கத் தொடங்கிவிடும் பயம் தானாகவே ஏற்பட்டுவிடும். யாருக்கும் ஏற்படும் வருத்தங்கள் எங்களுக்கும் வந்துவிடுமோ?“, நாங்கள் இறந்துவிடுவோமோ?“ என்ற பயம் ஏற்படும். இப்படியாக இன்னும் பல காரணங்களால் வயோதிபத்தில் மரண பயம் ஏற்படுவதுண்டு.

இந்தப் பயத்தை நாங்கள் எங்கள் பயணத்தில் கூடவே கொண்டு செல்ல முடியுமா? மடியில் கணத்தைக் கொண்டு சென்றால் வழி முழுக்க பயம் இருக்கத்தானே செய்யும்? இந்தக் கணத்தை நாங்கள் தூக்கி எறியவேண்டும்! ஆனால் எப்படி? நான் பானிக் நோயில் எட்டுமாதங்கள் மிகவும் சிரமப்பட்டேன். அதற்குக் காரணம் என் உறவுகள் சிநேகிதம் எனக் குறுகிய காலத்தில் ஐந்தாறு பேர் அறுபத்தெட்டு, எழுபது வயதுகளில் இறந்ததுதான். அவர்கள் பிரிவும் அதனால் ஏற்பட்ட பயமும் என்னை மிகவும் சோர்வு அடைய வைத்தது. அந்த நோயிலிருந்து விடுபடப் பல வழிகளில் முயற்சி எடுத்தேன். இப்போது பல சமூக ஊடகங்கள் உள்ளன. என்ன தேவையோ இலகுவாக அறிந்து கொள்ள முடியும். நான் பல வழிகளில் தேடி மூச்சுப் பயிற்சிகள் செய்யத் தொடங்கினேன். தொடர்ந்து மனச் சந்தோஷத்துக்காகச் சில உடற் பயிற்சிகளும் செய்தேன். என் பொழுதை வேறு வழிகளில் திருப்ப ஓவியங்கள் வரைந்தேன். கைவேலைகள் செய்தேன். இவையெல்லாம் எனக்கு எதுவித உபயோகம் இல்லாவிட்டாலும் என் மனதுக்கு உபயோகமாகவும், என் எண்ணங்களைத் திசை திருப்பவும் உதவியது.

வீட்டைவிட்டு தனியே போகாத நான் வெளியே போகத்தொடங்கினேன். அருகில் உள்ள கிராமங்களுக்கெல்லாம் போய் வந்தேன். என் மனம் மாற்றம் அடையத் தொடங்கியது . நெஞ்சு நோ வரும் போதெல்லாம் “நேற்று நோ வரும்போது சாகாத நீ, இன்று நெஞ்சு அடைத்துச் சாகப் போறீயா?“ என்று எனக்கு நானே கேட்பேன். அட சீ, நீ அந்தப் பக்கம் போ என்ற வகையில் என் முகத்தைத் திருப்புவேன். இரவில் தூங்கும்போது வேண்டாத எண்ணங்கள் எல்லாம் அடுத்து அடுத்து படம் போல ஓடும்.

28 ஆம் பக்கம் பார்க்க...

டொட்மூண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

சனிக்கிழமை 15.00– 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00–17:45
Free
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும்,
எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche,
die sich mit der tamilische Sprache nicht auskennen

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால்
கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில்
இருந்து பெரியோர்கள் வரை
இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!


6€ Pro Stunde

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)


6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 –19.15
யேர்மன் மொழியில் பேசவும்
எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு
பயன் உள்ளதாக அமையும்

அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

உக்ரேன் போரில் அமெரிக்க முரண்நகை:



# ஏவுகணை பாவிக்க பைடன் அனுமதி! போர் உதவியை நிறுத்தும் டிரம்ப்!!

எதிர் வரும் 2025 ஜனவரியில் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறும் ஜோ பைடன், உக்ரேனுக்கான உதவிகளை விரைவுபடுத்த முயன்று வருகிறார்.


பிரேஸிலில் ஜி20 மாநாட்டில் ஜோ பைடன் கலந்துகொண்டு உரையாற்றும் போது, உக்ரைனின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை காப்பாற்ற முழுமையான ஆதரவை வழங்கவுள்ளதாக தெரிவித்திருந்தார். ரஷ்யாவிற்கு ஆதரவாக வடகொரிய படைகள் களமிறக்கப்பட்ட பின்னர் இந்த தீர்மானத்தை அமெரிக்க மேற்கொண்டுள்ளதாகவும், உக்ரைனுக்காக பைடனின் இறுதி முயற்சி இதுவெனவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு எதிர்மறையாக அமெரிக்காவின் அடுத்த அதிபராக பொறுப்பேற்க இருக்கும் டொனால்ட் டிரம்ப், உக்ரேனுக்கான ஆதரவை குறைப்பார் அல்லது நிறுத்துவார் என தெரிவிக்கபடுகிறது. ரஷ்யாவுக்கு எதிரான போரில் யுக்ரேனுக்கு ஆயுதங்களை வழங்குவதில் அமெரிக்க அரசே முன்னணியில் உள்ளது.

மீண்டும் அமெரிக்காவின் ஜனாதிபதியாகும் டொனால்ட் ட்ரம்ப் எதிர் காலத்தில் உக்ரைனுக்கு ஆதரவு வழங்கப்படாது என கூறியமை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பலத்த கண்டனத்துக்கும் உள்ளாகியது.

## ஏவுகணை பாவிக்க பைடன் அனுமதி:

உக்ரேன் அரசு ஏடிஏசிஎம்எஸ் ஏவுகணையைப் பயன்படுத்தலாம் என்ற பைடனின் அனுமதி, வட கொரிய வீரர்களை உக்ரேனில் சண்டையிட அனுமதிக்கும் ரஷ்யாவின் முடிவிற்கு பதிலடியாக வந்தது என்று சில அமெரிக்க அதிகாரிகள் நியூயார்க் டைம்ஸ் மற்றும் வாஷிங்டன் போஸ்ட் ஊடகங்களிடம் கூறியுள்ளனர். ஏடிஏசிஎம்எஸ் ஏவுகணைகள் 300கிமீ வரை செல்லக் கூடியவை. ரஷ்யாவுக்குள் தாக்குதல் நடத்த அமெரிக்கா வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரேன் பயன்படுத்த அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அனுமதி அளித்துள்ளார். ஜோ பைடனின் முடிவு போரின் போக்கை மாற்றும் ஒன்று அல்ல. ஆயினும் உக்ரேனிய படைகளை மேலும் வலிமை கொண்டதாக மாற்றும் என கருதப்படுகிறது.

ரஷ்யா – உக்ரேன் போரில் அமெரிக்கா கடைபிடித்து வந்த கொள்கையின் முக்கிய மாற்றமாக இந்த நடவடிக்கை பார்க்கப்படுகிறது. உக்ரேனின் அதிபர் விலோடிமிர் ஜெலென்ஸ்கி, ஏடிஏசிஎம்எஸ் (ATACMS)



எனப்படும் ஏவுகணைகள் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும் என்று பல மாதங்களாக வலியுறுத்தி வருகிறார். இந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டால் உக்ரேன், தனது நாட்டின் எல்லைக்கு அப்பாலும் அதனை பயன்படுத்தி தாக்குதல் நடத்த முடியும்.

## உக்ரேன் போரில் டிரம்ப் நிலைப்பாடு:

பிற நாடுகளுக்கான ராணுவ உதவிகளால் அமெரிக்காவின் வளங்கள் வீணாகின்றன என்பது ட்ரம்ப் அரசின் கருத்தாகும். தன்னால் போரை முடிவுக்கு கொண்டு வர முடியும் என்று கூறிய அவர், அதை எவ்வாறு செய்யப் போகிறார் என்று வெளிப்படையாக இதுவரை கூறவில்லை. 2022 பெப்ரவரி போரின் தொடக்கத்திற்கும் ஜூன் 2024 இறுதிக்கும் இடைப்பட்ட காலத்தில், உக்ரேனுக்கு 55.5 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை அமெரிக்கா வழங்கியுள்ளது. இத்தகைய உதவிகளையும், உக்ரேனுக்கான ஆதரவை பாரியளவில் குறைப்பார் அல்லது நிறுத்துவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

## நேட்டோ நேரடி பங்கேற்பு:

இந்நிலையில், உக்ரைன் நீண்ட தூர ஏவுகணைகளை பயன்படுத்தினால் மோதல் மேலும் தீவிரமடையும் எனவும் தகுந்த பதிலடி வழங்கப்டும் எனவும் ரஷ்யா எச்சரித்துள்ளது. நீண்ட தூர ஏவுகணை கட்டுப்பாடுகளை நீக்குவது, உக்ரேன் போரில் நேட்டோ ராணுவ கூட்டணியின் நேரடி பங்கேற்பை பிரதிநிதித்துவப்படுத்தும் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் மேற்கத்திய நாடுகளுக்கு முன்பே எச்சரிக்கை விடுத்திருந்தார். கடந்த ஆகஸ்டில் உக்ரேன் திடீரென தாக்குதலைத் தொடங்கி தனது கட்டுப்பாட்டில் இருக்கும் ரஷ்ய நிலப்பரப்பின் சிறு பகுதியை தக்க வைத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு உதவுவோம் என பைடனின் நிர்வாகம் உறுதியளிக்கிறது.


வருங்கால பேச்சுவார்த்தைகளில் இந்த நிலப்பரப்பை ஒரு பேரம் பேசும் கருவியாக பயன்படுத்தலாம் எனவும் உக்ரேன் அரசு நினைக்கிறது.

ஏடிஏசிஎம்எஸ் ஏவுகணை பற்றிய அமெரிக்காவின் முடிவு என்பது, ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்திற்குள் உக்ரேனிய படைகளின் பாதுகாப்புடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

## போரில் வடகொரிய துருப்புகள் :

ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் இருந்து உக்ரேனியப் படைகளை வெளியேற்றுவதற்காக திட்டமிடப்பட்ட ரஷ்ய – வடகொரிய துருப்புகளின் கூட்டுத் தாக்குதல் சில நாட்க ளில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகி றது. குர்ஸ்க் பகுதியில் 11,000 வட கொரிய வீரர்கள் இருப்பதாக அறியப்படுகிறது. அதனை முறியடிக்க ரஷ்யாவிற்குள் நீண்ட தூர 'ஸ்டார்ம் ஷேடோ' (Storm shadow) ஏவுகணைகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்த உக்ரேனுக்கு அனுமதி அளிக்கக்கூடும். உக்ரேனின் கிழக்குப் பிராந்தியங்களில் உள்ள ரஷ்ய துருப்புகளைத் தாக்குவதற்கு முதன்முறையாக அமெரிக்கா வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரேன் பயன்படுத்தியதாக ஜெலென்ஸ்கி உறுதிப்படுத்தினார்.

உக்ரேனிய படைகளுக்கான முக்கிய விநியோக மையமாக இருக்கும் போக்ரோவ்ஸ்க் நகரை நோக்கி மெதுவாக முன்னேறி வரும் ரஷ்ய துருப்புகளை பின்னுக்குத் தள்ள, உக்ரேன் பல மாதங்களாக போராடி வருகிறது. ஏடிஏசிஎம்எஸ் ஏவுகணைகள் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும் என்று பல மாதங்களாக வலியுறுத்தி வருகிறார். உக்ரேன் பல மாதங்களாக அதன் நட்பு நாடுகள் தனக்கு போதுமான ஆதரவை வழங்கவில்லை என குற்றம் சாட்டியுள்ளது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

Nandy's Catering & Partyservice

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de

அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# ஐயனே! என்னுயிரின் ஆசையே!




உயிர் தீண்டும் உறவினை உணர்ந்தவர் உலகத்தின் மொத்த சுகத்தையும் அனுபவித்திருப்பர். அமரசுகம் எதுவென்று அறிந்திருப்பர். அது கிடைத்தற்கு அரியது. உயிர் தீண்டுவதாக எண்ணுவது வேறு. நிஜமாகவே உயிர் தீண்டப்படுவது வேறு. மிக நுட்பமான வித்தியாசம் என்றாலும் விளைவு மிகப் பெரிது.

“தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா– நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா“

“ அவன் கை இட்ட இடத்திலெல்லாம் தண்ணென்று இருந்ததடி புதிதோர் சாந்தி பிறந்ததடி“

ஒன்றின் மீதான அதிகூடிய விருப்பினை ஆசை என்று அழைக்கலாம். என் உயிரின் அதிகூடிய விருப்பாக இருக்கும் என் ஐயன் எனை நீங்கத் துணிந்தால்??? கடவுளே ! என்னை சூழ்ந்திருக்கும் அத்தனை இன்பங்களும் நீங்கி விட்டது போலல்லவா இருக்கும் ? ஏதுமற்றவளாகி ஏழையாகித் தானே கிடப்பேன்? உயிர்க்கு உயிராகிக் கிடந்தவர் பிரிந்தால் உயிர் தங்குமா? நான் உயிர் வாழ்வதே உங்கள் திருவுளத்தின் கருணையினால் , அந்த காதலினால் தானே ? இவ்வுலகினில் வாழ்வதா ? இல்லை என்னை கொன்றுவிடப் போகு நீரா? ஒரே வார்த்தையில் சொல்லுங்கள் என்று கேட்பது பாரதியின் குயில் மட்டும் தானா ??

ஐயனே ! என்னுயிரின் ஆசையே !
ஏழையெனை வையமிசை
வைக்கத் திருவுளமோ ?
மற்றெனையே கொன்றுவிட சித்தமோ ?
கூறீர் ஒரு மொழியில்
அன்றில் சிறு பறவை ஆண்பிரிய
வாழாது ஞாயிறு தான் வெம்மை செயின்
நாள் மலர்க்கு வாழ்வுளதோ?

சூரியனின் ஒளி தீண்டினால் தான் மலரும் எனும் பூவிற்கு, அந்தச் சூரிய ஒளி தாங்கமுடியாத வெப்பத்தினை தரும் எனில் , சூரிய ஒளி பட்டால் வாடும் எனும் நிலைவரின் எவ்வாறு உயிர் வாழும் ?? காதல் கொண்ட ஆண் பிரிந்தாலும் வாழத் துணியும் பெண் மனது இருப்பதாக இன்னும் தெரியவில்லை.

அப்படியே வாழ்ந்தாலும் அது சுயமிழந்த உயிரிழந்த வெறும் சடமாகவே கிடக்கவும் கூடும்.

“ சதையைத் துண்டு துண்டாக்கினும் உன் எண்ணம் சாயுமோ ? ஜீவன் ஓயுமோ ? “

ஆனாலும் வெவ்விதியை வென்றிடுவார் இவ்வுலகில் உண்டோ ?? ஏதேதோ காரணங்களை காட்டியும் காட்டாமலும் நீர் என்னை விட்டு விலகத் துணிகிறீர். என்னகத்தே நீர் கொண்ட ஸ்தானத்தை அறிவீரா? இப்பூவுலகில் உள்ள பலகோடி, பலகோடி மக்களில் ஒருவராய் உம்மை நான் என்றும் கருதியதில்லை. என் ஐம்புலன்களும் வியந்து மகிழும் விண்ணுலகத்து தெய்வமாய் என்னுள்ளத்தே உங்கள் இருப்பிடத்தை ஸ்தாபித்துளேன். இன்னோர் மானுடனால் நிரப்ப முடியாத பேரிடம். நின் பிரிவால் வெற்றிடமாகும் என்று தெரிந்தும் பிரியத் துணிந்தால், பிரிந்திடும் என் ஆவி.

தேவர் சினந்துவிட்டால்
சிற்றுயிர்கள் என்னவாகும் ?
ஆவற் பொருளே அரசேயென்
ஆரியரே
சிந்தையில் நீர் என்மேல்
சினம் கொண்டால்
மாய்ந்திடுவேன்
வெந்தழலில் வீழ்வேன்
விலங்குகளின் வாய்ப்படுவேன்

ஐயனே! என் தெய்வமே! நீர் என்மீது குற்றம் சுமத்தினால் அதனை மறுப்பதற்கு கூட உம் மீது நான் கொண்ட அன்பு இடம் தருகுதில்லை. ஆனாலும் என்மேல் எந்தக் குற்றமும் இல்லை. இதனை யார் நம்பிடுவார் ? நான் சொல்லித்தான் நீர் புரிய வேண்டுமா ?

சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை என்று குறிப்பினில் ஒன்றுபடும் சுவையை காட்டித்தந்த உமக்கு இப்போது நான் சொல்லித் தான் புரிய வைக்க வேண்டுமா ? இல்லை இல்லை என் ஐயனே ! நீர் என்னருமை செல்வம்.



கலாசூரி
திவ்யா சுஜேன்
(இலங்கை)

என் உயிரின் உயிர். என் தெய்வம். உம்மை குற்றம் சொல்ல ஒருபோதும் என் சிந்தை கூட துணியாது. என் வார்த்தைகளை நம்பாது நீர் புறக்கணிப்பது விதியின் விளையாட்டு மட்டுமே.


நின்மேல் சுமை முழுதும் நேராகப் போட்டுவிட்டேன் வெவ்விதியே !

நிற்க.! இதுவொன்றும் குயிலின்உளறுமொழிபோலதோன்றவில்லை. இந்த வையத்தில் வாழ்கின்ற மக்கள் பலரின் உளமொழிபோல் எண்ணத் தோன்றுகிறது. தற்பெருமையும், அகங்காரமும், மற்றவரை குறை காணும் குரூர புத்தியும், குரோதமும், கோபமும் கொண்டு கூப்பாடு போட்டுக்கொண்டு தன்னையும் அழித்துத் தன் மீது அன்பு கொண்டவரையும் அழித்து வாழத் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் கலக மானிடப் பூச்சிகளுக்கு என்றாவது இன்பபுரியின் வாசலையாவது காட்டிச் செல்ல நினைத்திருப்பார் பாரதி.

காதலினால் மானிடருக்கு கவலைபோம், ஆதலினால் காதல்செய்வீர்உலகத் தீரே! அஃதன்றோ இவ்வுலகத் தலைமையின்பம் என்று கற்றுத் தந்த பாரதி குயில் பாட்டு என்னும் அற்புத காவியத்தை வடிக்கிறார். வேதாந்தமாக விரித்துச் சொல்ல வாசகனையே அழைக்கிறார். பொருளுணர்தலும் , சுவை உணர்தலும் அவரவர் திறன் என்ற திறந்த வெளிக்குள் விட்டுவிட்டு கண்டதெல்லாம் கனவு என்று சொல்லிச் செல்லும் பாரதியின் நுண்மையை வியந்தவளாய் மீண்டும் அவனைச் சிக்கெனப் பிடித்தேன் சரண்புகுந்தேன் தொலைந்தேன்.




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்


Nila Decoration
GN EVENT
NANDY'S
THE BEST OF 90'S & 2000
Alaipayuthey
அலைபாயுதே
JANUARY
11
KORG
BOOKING PARTNER
GRUGAHALLE ESSEN
FOR SPONSORS & MORE INFO
gn_event_germany
0178 378 09 86
gnevent.info@gmail.com




# ‘பாராட்டு எனும் ஒற்றை வார்த்தை செய்யும்’ மேஜிக்



பிரியா இராமநாதன்
(இலங்கை)

அலுவலகங்களாகட்டும், குடும்பங்களாகட்டும் நாம் எவ்வளவுதான் perfect டாக நம்முடைய கடமைகளை செய்தாலும் நம்மை சார்ந்தவர்கள் அநேகமாக நம்மை குறைகூறிக்கொண்டேதான் இருக்கக்கூடும். அப்போதுதான் அடுத்தமுறை இதைவிட திறமையாக நாம் நம்முடைய பொறுப்புக்களை செய்வோம் என்றோ அல்லது கொஞ்சம் பாராட்டினாலோ அல்லது புகழ்ந்து பேசினாலோ நாம் தெனாவட்டாக மாறிவிடுவோம் என்றோ அவர்கள் கருதுவதுண்டு .

வீட்டு வேலைகளை செய்வது மனைவியின் கடமை இதில் என்ன பாராட்ட இருக்கிறது? சம்பாதித்து போடுவது கணவனின் கடமை இதையெல்லாமா பாராட்ட வேண்டும் ? நாம் கொடுக்கும் காசுக்கு பொருளைத் தருகிறார்கள் இதில் பாராட்ட என்ன இருக்கிறது ? ஊதியத்திற்காக பணி புரிபவர்களுக்கு என்ன பாராட்டு வேண்டிக்கிடக்கு ? கல்வியை கற்றுகொள்ளவதும், சமத்தாக இருப்பதும் குழந்தைகளின் வேலை அதற்கொன்றும் பாராட்டு வேண்டியதில்லை! இப்படித்தான் நம்மில் அநேகர் நினைத்துக்கொண்டிருப்போம். ஆனால் இதன் பின்னணியில் உள்ள யதார்த்தம் என்ன ??!!! நாம் அனைவருமே பாராட்டு, அங்கீகாரம், இதற்குத் தானே ஆசைப்படுகிறோம். அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு அவர்கள் செய்யும் வேலைக்குப் பாராட்டும் அங்கீகாரமும் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.வீட்டில் சமையல் செய்யும் மனைவிக்கோ அம்மாவிற்கோ அதைச் சாப்பிட்டுவிட்டு பாராட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. ஒரு பேப்பரில் கிறுக்கி வைத்திருக்கும் குழந்தை அதனை ஓர் மிகப்பெரிய ஓவியமாக கருதி பெற்றோர்கள் தன்னை பாராட்ட வேண்டும் என எதிர்பார்க்கிறது , விற்பனையாளர் தம்முடைய சேவையும், பொருளின் தரமும் எப்படியிருக்கிறது என்பதை பாராட்டின் வழியே வாடிக்கையாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கிறார்கள். இவையெல்லாமுமே மிகச் சாதாரணமான யதார்த்தமான எதிர்பார்ப்புக்கள் மட்டுமே. இந்த எதிர்பார்ப்புக்கள் பொய்த்துப்போகும்போது அதன் விளைவுகள் விபரீதமாகவோ அல்லது வினைத்திறன் அற்றதாகவோ மாறிவிடும் என்பதுதான் உண்மை !

“மனித மனம் தனது ஆழத்தில் பாராட்டுக்காக ஏங்குகிறது” என்கிறார் வில்லியம் ஜேம்ஸ். தான் முக்கியமானவனாகக் கருதப்படவேண்டும், தான் அங்கீகரிக்கப் படவேண்டும், பிறரால் விரும்பப் படவேண்டும் எனும் ஆசையின் ஆணிவேர்கள் எல்லா மனிதர்களுக்குள்ளும் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

இப்படி ஏன் பாராட்ட வேண்டும் என்று கேட்கும் பலருக்கும் பாராட்டுகள் செய்யும் மாயாஜாலங்கள் புரிவதில்லை. பாராட்டு ஒருவருடைய தன்னம்பிக்கையை நிச்சயமாக வளர்த்துவிடக்கூடிய ஒன்று . பாராட்டு என்பது , தாம் செய்யும் வேலை சரியான பாதையில் செல்கிறது என்பதை ஒருவர் சரிபார்க்க உதவுகிறது. பாராட்டு என்பது , ஒரு நபர் தன்னை உற்சாகப்படுத்திக் கொண்டு பயணிக்க உதவுகிறது. இப்படி பாராட்டு எனும் ஒற்றை வார்த்தையில் பல ஆயிரம் நன்மைகள் புதைந்துகிடக்கும்போது நாம் ஒருவரை பாராட்டுவதில் தயக்கம் காட்டுவது ஏன் ? பாராட்டில் இருக்க வேண்டிய ஒரே விஷயம், அது ஆத்மார்த்தமானதாய் இருக்க வேண்டும் என்பது மட்டும்தான்.

போலித்தனமான பாராட்டுக்களின் பின்னணியில் சுயநலமே ஒளிந்திருக்கும். பாராட்டுவதற்கு பாசிடிவ் மனநிலை வேண்டும். வாழ்க்கையை இனிமையாகவும், ஆனந்தமாகவும், உற்சாகமாகவும் எதிர்கொள்பவர்களே பாராட்டுவதில் தயக்கம் காட்டுவதில்லை என்கிறது ஆய்வுகள்.

> **“ஊக்குவிப்பவர் ஊக்குவித்தால் ஊக்குவிப்பவரும் தேக்கு விற்பார் “**

என்கிறது வாலியின் கவிதை.நாம் கொடுக்கும் ஊக்கமும் பாராட்டும் மற்றவரின் ஆக்கத்திற்கு நிச்சயமாக அடித்தளமிடும். ஊக்கமும், பாராட்டும் வெற்றி என்னும் நாணயத்தின் இரண்டு பக்கங்களாக இருக்கின்றன. பிறரை ஊக்கப்படுத்தும் போதும், பாராட்டும் போதும் ஒரு நல்ல செயல் நடைபெறுவதற்கான முயற்சியில் நாமும் சிறுதுளியாக இருக்கின்றோம். ஊக்குவிக்கும் போது பிறர் மனம் உற்சாகம் அடைவதுபோலவே பாராட்டுகின்றபோது நம் மனமும் பக்குவமடைகின்றது .ஒருவர் ஒன்றை செய்வதற்கு முன்னதான நமது ஊக்கமும், அவர் அதனை செய்து



முடித்தபின்னரான பாராட்டும் ஒருவரின் வாழ்க்கையை நிச்சயமாக புரட்டிப்போடக் கூடியது. நாம் ஒருவரைப் பாராட்டினால் அவர்களுக்கு மட்டுமே அந்த சந்தோஷம் தொற்றிக் கொள்வதில்லை. நம் மனதிற்குள்ளும் அந்த உற்சாகம் தொற்றிக்கொள்ளும் என்பதுதான் யதார்த்தம்.

இதில் மற்றுமோர் விடயத்தினையும் நாம் கருத்தில்கொள்வது நல்லது, அதாவது யாரேனும் ஒருவர் மிகப்பெரிய சாதனைகளை செய்து முடித்தால் மட்டும் தான் நாம் பாராட்டியாக வேண்டும் என்பதற்கில்லை. சின்னச் சின்ன செயல்களில்கூட நம்முடைய பாராட்டுக்கள் ஒருவருக்கு ஊக்கம்கொடுக்கக்கூடியதாக இருக்கவேண்டும். சின்னச் சின்னப் பாராட்டில்தானே அன்பும் சந்தோஷமும் வளரும் ?

“இப்போதெல்லாம் பாராட்டும் பழக்கமே குறைந்து விட்டது” என்று சொன்னால் உடனே நாம் எல்லோரும் தலையாட்டுவோம்.“ஆமாம். யாருமே யாரையுமே பாராட்டுவதில்லை. எல்லோருக்கும் ஈகோ” என சலித்துக் கொள்ளுவோம் . ஆனால் அப்படியே நாம் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், நாம் நம்முடைய அன்றாட வாழ்வில் எத்தனை பேரை பாராட்டிக் கொண்டிருக்கின்றோம் என்ற கேள்வி வரும்போது நமக்கே நம்மீது கொஞ்சம் எரிச்சலாகத்தான் இருக்கும் . ஏனெனில் எல்லோரும் நம்மை பாராட்ட வேண்டும் என எதிர்பார்க்கும் நம்முடைய மனம் அடுத்தவரையும் நாம் பாராட்ட வேண்டும் என்ற யதார்த்தத்தினை மறந்தேபோயிருக்கக்கூடும் ! இங்கு, பாராட்டு என்பது நம்மைத் தவிர மற்ற எல்லோரும் செய்ய வேண்டிய விஷயம்” என நாம் ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்வதுதான் பிரச்சினையே ! மனதாரப் பாராட்டுவது மனிதனுக்கே இருக்க வேண்டிய மிக மிக முக்கியமான பண்பு.

எந்தச் செலவும் இல்லாத விஷயம் இது. ஆனால் பணத்தினால் உருவாக்க முடியாத ஒரு ஆரோக்கியமான சூழலை பாராட்டுவதன் மூலமாய் உருவாக்கிவிட முடியும்.நல்ல விஷயத்தைப் பாராட்டுவதில் முதல் ஆளாய் நாம் நிற்கும்போது, நம்மைப்பற்றிய ஒரு நல்ல அபிப்பிராயமும் பிறரிடம் உருவாகும். பாராட்ட வேண்டும் என நினைத்து விட்டால் போதும், நம் கண்ணுக்கு பிறருடைய நல்ல விஷயங்கள் தெரிந்து கொண்டே இருக்கும். ஒவ்வொரு பாராட்டும் ஒருவகையில் தனிமனித முன்னேற்றத்துக்கு உதவுகிறது. தனிமனித வளர்ச்சி தானே சமூக வளர்ச்சியின் ஆதாரம்! சின்னச் சின்னப் பாராட்டில் அன்பும் சந்தோஷமும் வளரும்.







சேவியர்
(தமிழ்நாடு)

நடுப்பக்கம்

# புத்தாண்டில் புது மனிதன்!

இந்த புத்தாண்டுக்கா கத் தான் காத்திரு ந்தேன்.. இனிமே பாரு, நான் புது மனுஷன்! என காலையில் காபி குடிக்கும் முன்னாடியே சுடச்சுட எடுக்கின்ற தீர்மானங் கள்சுவாரஸ்யமானவை. ஒவ்வொ ருவருக்கும் ஒவ்வொரு விதமான தீர்மானங்கள். சிலருக்கு தூ ங்கத்தைக் குறைச்சு வாழ்க்கைல ஓட ஆரம்பிக்கணும் என்பது தீர் மானமென்றால், சிலருக்கு ஓட்டத் தைக் குறைச்சு தூங்க ஆரம்பிக் கணும் என்பது தீர்மானம். சில ருக்கு அடுத்த லெவலுக்கு ஆபீஸ்ல முன்னேறணும் என்பது தீர்மானமென்றால், சிலருக்கு இனிமேல் கொஞ்சம் வேலையை ஒதுக்கி விட்டு வீட்டைக் கவனிப் போம் என்பது தீர்மானம்.

எப்படி மனிதனுடைய கைரேகை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமோ, அப்படித் தான் மனிதர் களுடைய புத்தாண்டுத் தீர்மான ங்களும் ஒவ்வொரு ரகம்.

சமீபத்தில் வெளியான ஒரு ஆய்வு சொல்கிறது, எட்டு விழுக்காட்டிற்கும் குறைவான மக்கள் தான் தாங்கள் புத்தா ண்டில் எடுத்த தீர்மானத்தை அரைகுறையாகவேனும் டிசம்பர் வரை கொண்டு செல்பவர்கள் என்று! அதாவது தொன்னூற்று இரண்டு விழுக்காடு தீர்மானங்க ளும் அந்த ஆண்டின் ஏதோ ஒரு நாளில் உடைபட்டு, அதன்பின் எழும்பாமல் அங்கேயே காலொடி ந்து கிடக்கிறது. அதிலும் பாதி பேர் முதல் மாதத்தையே தாண்டுவதில்லை என்பது வேறு விஷயம்.

ஜிம்களில் ஜனவரி மாத முதல் இரண்டு வாரங்கள் உங்களுக்கு இடமே கிடைக்காது. அடுத்தடுத்த மாதங்களில் ஆட்கள் வரும் தடமே தெரியாது. பீச்களில் ஜனவரிமாதம் பேரணி போல மக்கள் ஓடுவார்கள், அதன் பின் ஊரணி போல ஒடுங்கி விடுவார்கள். அதனால் தான் ஜிம்களில் ஒரு வருஷத்துக்கு பத்தாயிரம் ரூபாய் என்றால், ஒரு மாதத்துக்கு ஆறாயிரம் ரூபாய் என்பார்கள். நாலாயிரம் தானே அதிகம் என பத்தாயிரம் கட்டி புக் பண்ணுபவர்கள், அடு த்த வாரமே யோசிப்பார்கள், சே ஆறாயிரமே கட்டியிருக்கலாம் என !

புத்தாண்டுத் தீர்மானங்களும், பாசிபிடித்த குளக்கரைப் படிக்கட்டும் ஒன்று தான். கவனமாய்



நடக்கும்வரை பிரச்சினை இல்லை. கொஞ்சம் பிசகினாலும் மண்ட பத்திரம் கேஸ் தான்.

சரி, தீர்மானங்கள் எடுப்பது, அதை தொடர முடியாமல் போவதும் ஒரு பக்கம் என்றால், நாம் எடுக்கின்ற தீர்மானங்கள் எப்படி என்பவை இன்னொரு பக்கம். பொதுவாகவே தீர்மானங்கள் என எதை எடுப்போம் ? உடற்பயிற்சி செய்வேன், புத்தகம் படிப்பேன், ஒழுங்கா தூங்குவேன், நல்லா சாப்பிடுவேன், இந்த தம்மடிக்கிறது தண்ணியடிக்கிறதெல்லாம் விட்டு விடுவேன் இப்படித் தானே.. இந்த ஆண்டு கொஞ்சம் வித்தியாசமான தீர் மானங்களை எடுக்கலாமா ?

## 1. தினம் ஒரு நன்றி !

நமது வாழ்க்கையில் நம்மைச் சுற்றி எத்தனையோ மனித ர்கள் இருக்கிறார்கள். நம்முடை டய அலுவலகத்தில், வீட்டில், நண்பர்கள் வட்டாரத்தில் என பலரும் நம்மோடு இணைந்து வாழ்கிறார்கள். குறைந்த பட்சம் தினம் ஒரு நபருக்கு நாம் நன்றி சொல்ல முயல்வோம். வெறுமனே நன்றி என சொல்லாமல், அவர்கள் செய்த செயல்களைக் குறிப்பிட்டு, அது நமக்கு பயனுள்ளதாக இருந்தது அல்லது மகிழ்ச்சியாக இருந்தது என மனப்பூர்வமாய் குறிப்பிட்டு நன்றி சொல்லுவோம்.

ஒரு நாள் ஒரு நபர் என்று வைத்தால் கூட ஒரு ஆண்டில் நாம் முன்னூற்று அறுபத்தைந்து நபர்களுக்கு நன்றி சொல்லியி ருப்போம். அதன் பின் நன்றி சொல்லும் பழக்கம் நம்மை ஒட்டிக் கொள்ளும். உலகம் நன்றியால் நிரம்பும். நன்றி சொல்லும்போது நமது மனதுக்குக் கிடைக்கும் மகிழ்ச்சி ஒரு புறம், நன்றியைப் பெற்றுக் கொள்பவருக்குக் கிடைக்கும் ஊக்கம் இன்னொரு புறம். நம்புங்கள் ! ஒரே ஆண்டில் உங்களைச் சுற்றியிருக்கும் மனித ர்கள் பலரின் வாழ்க்கையில் நீங்கள் ஒரு நல்ல மாற்றத்தை உருவாக்கியிருப்பீர்கள் !

## 2. வாரம் ஒரு உதவி !

உதவி தேவைப்படும் மனிதர் களுக்குப் பஞ்சமே இல்லை. ஆனால் உதவிக் கரம் நீட்டும் மக்களுக்குப் பஞ்சம் இருக்கி றது. நமது தூரத்துச் சொந்தக்கார ர்கள், நண்பர்களின் குடும்பங் கள், நமது பிள்ளைகளின் நண்பர்களின் குடும்பங்கள் என எத்தனையோ மக்கள் தேவை யில் உழன்று கொண்டிருக்கி- றார்கள். சற்றே கண்ணை

17 ஆம் பக்கம் பார்க்க...







அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# புத்தாண்டில் புது மனிதன்!



டிஜிடல் திரையிலிருந்து வாழ்வின் வீதிக்குத் திரும்பினால் நமது அன்புக்காக ஏங்கும் மக்கள் எக்கச்சக்கமாக இருப்பதைக் காணலாம். வாரம் ஒரு முறை ஒரு உதவி என வைத்துக் கொண்டாலே நமது ஒரு ஆண்டில் அரை நூறு மக்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சி விளக்கை ஏற்றி வைத்திருப்போம். பெரிதாக ஒன்றும் செய்ய முடியாவிட்டால், நாம் உணவகம் செல்லும்போது வெளியே நிற்கின்ற ஒரு ஏழையை அழைத்து அவனுக்கும் நம்மோடு உணவருந்த ஒரு வாய்ப்பைக் கொடுக்கலாம். துணி எடுக்க கடைக்குச் செல்லும்போது வெளியே நிற்கும் ஒரு ஏழைக் குடும்பத்தையும் அழைத்து அவர்களுக்குத் தேவையான துணியை எடுத்துக் கொடுக்கலாம். வசதியே இல்லை என்றால் கூட, ஏதோ ஒரு நோயாளியைச் சந்தித்து ஆறுதலாவது சொல்லலாம். வாழ்வின் அர்த்தம், நாம் சேமிப்பதில் இல்லை செலவழிப்பதில் இருக்கிறது என்பதைக் கண்டு கொள்ளலாம்.

## 3. மாதம் ஒரு சந்திப்பு !



டிஜிடல் உலகம் நம்மை உண்மையான உறவுகளிடமிருந்து விலக்கி வைத்து விட்டது. வாட்சப்களில் தான் வசிக்கிறோ, குரல்களோடு தான் குடும்பம் நடத்துகிறோம். இந்த நிலையை மாற்றுவதற்கான முயற்சியை நாம் எடுக்க வேண்டும். மாதம் ஒரு குடும்பத்தைச் சென்று பார்த்து, அவர்களோடு நேரம் செலவிட்டு, அவர்களுக்குத் தேவையான சில பொருட்களை வாங்கிக் கொடுத்து உறவைப் புதுப்பித்துக் கொள்ளலாம். நமது பார்வை படாத தூரத்துச் சொந்தங்கள் எத்தனையோ இருக்கலாம். இத்தகைய சந்திப்புகள் அவர்களுக்கு வாழ்க்கையின் மீது ஒரு பிடிப்பையும், உறவுகளின் மீது ஒரு நம்பிக்கையையும் உருவாக்கும். அவர்களுடைய பல தேவைகள் நமக்கு தெரியவரும். உலகம் உறவுகளால் ஆனது. உறவு சந்திப்புகளால் ஆனது. உறவினர்கள் இல்லையேல், நண்பர்களின் வீடுகளைச் சந்திக்கலாம். நண்பர்களும் இல்லையேல் ஏதேனும் அக்கம் பக்கத்து மனிதர்களை நண்பர்களாக்கிக் கொள்ளலாம். சந்திப்புகள் வாழ்வினை நிச்சயம் வளமாக்கும்! நமது மனதுக்கும் மாறுதலும், ஆறுதலும் கிடைக்கும்.

## 4. காலாண்டுக்கு ஒரு கருணை இல்லம் !

இல்லங்களில் அன்பு நீர்த்துப் போகும் போது அனாதை இல்லங்களும், முதியோர் இல்லங்களும், ஆதவற்றோர் இல்லங்களும் அதிகரிக்கின்றன. செடிகளை எட்டி உதைக்கும் பூக்களாக பெற்றோரை எட்டி உதைக்கும் பிள்ளைகள் சமூகத்தின் தவிர்க்க முடியாத தீய சக்திகளாகிவிட்டனர். சிலரை மாற்றுவது இயலாத காரியமாகும் போது, சிலரைத் தேற்றுவதை நாம் கையிலெடுப்போம். உண்மையிலேயே நமது உதவிகளுக்காகவும், நமது நேரத்துக்காகவும் கையேந்துகின்ற இல்லங்களை காலாண்டுக்கு ஒரு முறை சந்தித்து, சில மணி நேரங்கள் செலவிட்டு வருவது நமது வாழ்க்கையை அர்த்தப்படுத்தும். இது நமது காலாண்டு நேரத்தில் 0.02 விழுக்காடு மணி நேரங்கள் மட்டுமே என்பதை மனதில் கொள்வோம். வெறுமனே பணத்தை அனுப்பி ஒரு நேரம் உணவு சாப்பிடுங்கள் என சொல்வதை விட, நேரடியாகச் சென்று அவர்களோடு சில மணி நேரங்கள் அமர்ந்திருப்பது மிகவும் பயனளிக்கும். அவர்கள் தங்களுடைய கதைகளைக் கேட்பதற்கான காதுகளுக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களுடைய மன உளைச்சல்களை, நினைவுகளை, கனவுகளை, ஏக்கங்களை, மகிழ்ச்சியைப் பகிர்வதற்கான தருணங்களுக்காகக் காத்திருக்கிறார்கள்.

## 5. அரையாண்டுக்கு ஒரு முறை ஆலய பயணம் !

வாரம் தோறும் ஆலயம் போகிறேன், சர்ச் போகிறேன், அடிக்கடி மசூதி போகிறேன் என்பதல்ல நான் சொல்ல வருவது. ஆறு மாதத்துக்கு ஒரு முறை குடும்பத்தினரோடு சேர்ந்து சற்றுத் தொலைவில் உள்ள ஏதோ ஒரு ஆலயத்துக்குச் சென்று குறைந்தபட்சம் அரை நாளை அங்கும், அங்குள்ள மக்களோடும், அங்குள்ள ஏழைகளோடும் செலவிடுவது. ஆலய முற்றங்கள் நமக்கு பல ஆன்மிக தெளிவுகளையும், மன நிம்மதியையும் தரும். அவை மதம் சார்ந்த தெளிவுகளல்ல, அவை இறை சார்ந்த நிறைவுகள். குடும்பத்தோடான ஆலய தருணங்கள் குடும்பத்தையே கட்டியெழுப்பும்.

புதிய புதிய ஆலயங்களுக்குச் செல்லும்போது அந்த ஆலயம் குறித்த புரிதல், சில வரலாற்று வியப்புகள் எல்லாமே நமக்குக் கிடைக்கும். புதிய இடங்களுக்கு நாம் செல்லும் போது நமது புலன்களும் புதிதாகும். நமக்குள் சுழன்று கொண்டிருக்கும் கொந்தளிப்புகள் சாந்தமாகும்.

## 6. ஆண்டுக்கொரு முறை குடும்ப சுற்றுலா !

ஆண்டுக்கு ஒரு முறை கண்டிப்பாக குடும்பத்தினரோடு வெளியூர் சென்று சில நாட்கள் தங்கிவிட்டு வருவது வாழ்க்கையை மிகவும் அழகுள்ளதாய் மாற்றும். நமது குடும்ப உறுப்பினர்களோடு ஏதோ ஒரு புதிய ஊரில், புதிய உணவகங்களில், புதிய இயற்கைச் சூழலில் உலவுவது உண்மையிலேயே மிகப்பெரிய ஆசீர்வாதம். நமது பெற்றோர் நம்மோடு இருக்கும்போதே, அவர்கள் ஆரோக்கியமாக இருக்கும்போதே இத்தகைய சுற்றுலாக்களை அமைத்துக் கொண்டால், அவர்கள் விடைபெற்றபின் நாம் குற்ற உணர்விலும், துயர உணர்விலும் கலங்க வேண்டியிருக்காது.

சுற்றுலா என்பது பணத்தை செலவு செய்யும் வழி என பலர் நினைக்கிறார்கள். அந்தப் பணத்தைச் சேமித்து வைத்து ஏதாச்சும் நல்ல விஷயங்கள் செய்யலாம் என சிலர் கருதுகிறார்கள். அப்படியல்ல, சுற்றுலாக்கள் நமது சிந்தனைகளின் துருக்களை விலக்கும். நமது உறவுகளின் நெருக்கத்தை ஆழமாக்கும். நமது அன்பின் பகிர்தலை அர்த்தமுள்ளதாக்கும். அடுத்த ஆண்டு சுற்றுலாவுக்காக நம்மை ஏங்க வைக்கும். இங்கே செலவிடப்படும் பணம் உண்மையில் உறவுகளுக்காய் நாம் செய்யும் முதலீடு.

கடைசியாக ஒன்று! மன்னிப்பு. மன்னிப்பு இல்லாத வாழ்க்கை அழுக்கடைந்த குட்டையைப் போன்றது. மன்னிப்பை வழங்கிக் கொண்டே இருக்கும் மனமானது ஓடிக்கொண்டே இருக்கும் நதி போன்றது. குட்டை கொசுக்களின் முட்டையைத் தாங்கும், நாற்றத்தை உருவாக்கும், நலத்தை அழிக்கும். நதியானது மீன்களைத் தாங்கும், மலர்களைத் தாங்கும், ஈர வாசனையை உருவாக்கும், உடல்நலனை அளிக்கும்.! மன்னிக்கப் பழங்குங்கள். அதற்கு கால நேரம் இல்லை. தினசரி, வாரம் ஒரு முறை, மாதம் தோறும் என்றெல்லாம் கணக்குப் பார்க்காமல் மன்னிக்க வேண்டும். மன்னிக்கும்போது நாம் நமது காலில் தைக்கும் நெருஞ்சியை எடுத்து எறிகிறோம், மன்னிக்க மறுக்கும் போது அதை இன்னும் ஆழமாய்ச் சொருகுகிறோம்.

இத்தகைய நல்ல தீர்மானங்களை இந்த ஆண்டு எடுப்போம். அடிக்கடி நாம் தவறினாலும் கவலையில்லை, அடுத்த தருணத்திலிருந்து மீண்டும் தொடங்குவோம் தொடர்வோம். விழுந்த இடத்தில் நதி காலொடிந்து கிடப்பதில்லையே ! அருவியின் அடிவாரம் தானே அதன் எழுச்சியின் ஆரம்பம் ! தொடர்ந்து பயணிப்போம். புத்தாண்டில் ஒரு புதிய விடியலை உருவாக்குவோம்.

**அனைவருக்கும்**
**புத்தாண்டு நல்வாழ்த்து !**






# மக்கள் ஆதரவைத் தக்கவைப்பதற்கு தமிழ்க் கட்சிகளின் உபாயம் என்ன?

டக்ளஸ், அங்கஜன் ஆகியோர் ஆளும் கட்சியுடன் இருக்கமாட்டார்கள் என்றால், அவர்களுக்கு அவர்க2ள் மூலமாக எந்த நன்மையும் தமக்குக் கிடைக்கப்போவதில்லை என்ற நிலையில்தான், அவர்களுடைய ஆதரவாளர்கள் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரும்பினார்கள்.

மீனவர் பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகளை டக்ளஸால் அமைச்சர் பதவியைப் பயன்படுத்திக்கூட தீர்க்க முடியவில்லை. இதனால், டக்ளஸ் மீது மீனவ சமூகம் சீற்றமடைந்திருந்தது. மீனவ சமூகத்தின் வாக்குகள் முழுமையாக தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரும்பியது.

மறுபுறத்தில், தமிழ்த் தேசியக் கட்சிகளின் பின்னடைவுக்கு அவற்றிடையே காணப்பட்ட முரண்பாடுகளும், பிளவுகளும்தான் காரணம். ஒருவர் மீது மற்றவா் சேற்றை வாரி இறைப்பதால், தமிழ்க் கட்சிகள் மீதான நம்பிக்கையையும் மக்கள் இழந்துவிட்டனர். அதனைவிட, நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களைப் பேசிக்கொண்டிருப்பதையும் மக்கள் விரும்பவில்லை.

தாயகப் பகுதியில் குறிப்பாக வட பகுதியில் தமிழ்க் கட்சிகள் சந்தித்த பின்னடைவுகள் இவைதான் காரணம். அதேவேளையில், இந்தப் பாடங்களைக் கற்றுக்கொண்ட பின்னர் தமது தவறுகளைத் திருத்திக்கொண்டு புதிய பாதையில் பயணிக்க அவர்கள் முற்படுவதை ஆரோக்கியமானதாகவே பார்க்க வேண்டும். தற்போது உடைந்துபோயுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீளுருவாக்கம் செய்து அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒன்றிணைத்து செல்வதற்கு நான் இப்போதும் தயார் என்றும், நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளும் அதனையே எமக்கு எடுத்துக் கூறுகின்றன என்றும் தெரிவித்துள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் சிவஞானம் சிறீதரன்.



மறுபுறம், தமிழரசுக் கட்சியாக இருக்கலாம், எனைய தமிழ் கட்சிகளாக இருக்கலாம். பாராளுமன்றத்திற்கு வெளியே இருக்கலாம், சிவில் சமூகமாக இருக்கலாம், நாங்கள் அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அந்த விடயங்களை முன்கொண்டு செல்வதற்கு தயாராக இருக்கின்றோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவித்திருக்கின்றார். தமிழ்த் தேசிய வாக்குகள் என்று பார்க்கும் போது கடந்த முறையிலும் பார்க்க இந்த முறை சற்று குறைவாகவே மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இதற்கு தமிழ் தேசியம் என்று பேசிய தரப்பு பல தரப்பாகவும், சுயேட்சையாகவும் போட்டியிட்மையும் காரணம் என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார். தமிழ் மக்கள் கூட்டணியின் இணைந்து மான் சின்னத்தில் யாழ். மாவட்டத்தில் தலைமை வேட்பாளராகப் போட்டியிட்ட வீ.மணிவண்ணனும் இதேபோன்ற கருத்தைத்தான் முன்வைத்திருக்கின்றார்.

தமிழ் மக்களுடைய தீர்ப்பை நாங்கள் அதனை மதிக்கிறோம். அதிலிருந்து நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் இருக்கின்றது என்பதையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று மணிவண்ணன் தெரிவித்தார். தமிழ்த் தேசியம் பேசிய தரப்புக்கள் பல கூறுகளாக பிளவுபட்டமை எமது பின்னடைவுக்கு பிரதான காரணம். 2020 இல் மூன்று கூறுகளாக இருந்த இந்தக் கட்சிகள் இம்முறை வீடு, சைக்கிள், சங்கு, மான், மாம்பழம் என ஐந்து கூறுகளாக பிரிந்து போட்டியிட்டதுடன், ஏராளமான சுயேட்சைக் குழுக்களும் களமிறங்கியிருந்தன. வாக்குகள் இதனால் பிளவுபடுத்தப்பட்டன என்று மணிவண்ணன் கூறியிருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரிந்து போட்டியிட்டதனாலேயே அதிக ஆசனங்களை தேசிய மக்கள் சக்தியால் பெறக்கூடியதாக இருந்தது என்பதை தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இன்று ஏற்றுக்கொண்டுள்ளன. வீட்டிற்கு விழுந்த வாக்குகளையும், சங்கிற்கு விழுந்த வாக்குகளையும், மானுக்கு விழுந்த வாக்குகளையும் தவராசா தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வாக்குகளையும் சேர்த்து கூட்டினால் தேசிய மக்கள் சக்திக்கு விழுந்த வாக்குகள் குறைவானவை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக போட்டியிட்டிருந்தால் தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனம் மட்டுமே கிடைத்திருக்கும். போனஸ் ஆசனம் உட்பட மூன்று அல்லது நான்கு ஆசனங்கள் கூட்டமைப்புக்கு கிடைத்திருக்கும்.

இணைந்து செயற்பட வேண்டும் என்பதை அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இன்று ஏற்றுக்கொள்கின்றன. அதற்காக புதிய உபாயம் ஒன்றை வகுத்துச் செயற்படாவிட்டால், மாற்றமடைந்துள்ள இன்றைய அரசியல் சூழ்நிலையில், வடமாகாணத்தையும் இழக்கும் நிலைதான் ஏற்படும்!






# காத்திருக்கும் போது நேரம் நின்று விடுகிறதா?

நீங்கள் ஒரு சூப்பர் மார்க்கெட்டில் பெரிய வரிசையில் நிற்கின்றீர்கள் என்று எடுத்துக்கொள்வோம். ஒவ்வொரு நொடியும் நிமிடங்கள் போன்று தோன்றும் அல்லவா? அப்போது நேரம் ஏன் இவ்வளவு மெதுவாகச் செல்கிறது என்று யோசிக்கத்தோன்றும். இந்த அனுபவம், நாம் அனைவரும் சந்திக்கும் ஒன்றாகும். நேரத்தைப் பற்றிய நமது உணர்வுக்குப் பின்னால் இருக்கும் உளவியல் மற்றும் நரம்பணுவியல் சார்ந்த ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் இன்னும் ஈடுபட்டுள்ளனர்.

காத்திருப்பது நம் வாழ்க்கையின் தவிர்க்க முடியாத ஒரு பகுதியாகும். பேருந்து நிறுத்தத்தில் அல்லது மருத்துவரின் காத்திருக்கும் அறையில் கூட நேரம் நிற்கும் போல் தோன்றும். ஆனால் ஏன் காத்திருப்பது இவ்வளவு போராட்டமாக உணரப்படுகின்றது? ஆராய்ச்சிகளின் படி இதற்குப் பல காரணிகள் உள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளது. நம் எதிர்பார்ப்பு, சூழ்நிலை, மற்றும் நம் மனநிலை ஆகியவை எவ்வாறு நாம் காத்திருக்கும் நேரத்தை உணர்கிறோம் என்பதைத் தீர்மானிக்குமாம். உதாரணமாக, நாங்கள் அவசரத்தில் இருக்கும்போது அல்லது மன அழுத்தத்தில் இருக்கும்போது காத்திருப்பு நேரம் நீண்டதாகவே தோன்றும்.

காத்திருப்பதிலும் இரு விதமான காத்திருப்பு இருக்கின்றது, ஒன்று "செயலில் ஈடுபட்ட காத்திருப்பு" (occupied waiting) மற்றது "செயலில் ஈடுபாடற்ற காத்திருப்பு" (unoccupied waiting) ஆகும். காத்திருக்கும் அறையில் இதழ்களைப் படிக்கும்போது நேரம் வேகமாகச் செல்லும் போல் தோன்றும், ஆனால் இதுவே எதையும் செய்யாமல் இருந்தால், நிமிடங்கள் முடிவில்லாதவை போல் உணரப்படும். ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தது என்னவென்றால் நாம் ஒரு சூழ்நிலையைக் கட்டுப்படுத்துகின்றோம் என்று எண்ணினால் அல்லது நாம் செய்யவிருக்கும் விஷயத்துக்குக் காத்திருப்பது அத்தியாவசியம் என்று தோன்றினால், நமக்குக் காத்திருப்பு நேரம் குறைவாக இருப்பது போல் தோன்றுமாம்.

நமது நேர உணர்வில் உணர்ச்சிகள் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. நேரம் வேகமாகச் செல்லும் போல் தோன்றும் உணர்வை நேர்மறையான உணர்வுகள் ஏற்படுத்துகின்றன, அதே சமயம் எதிர்மறையான உணர்வுகள் அதனை நீடிக்கின்றன. ஒரு நண்பருடன் சிறந்த உரையாடல் எளிதில் மணிநேரங்களை நிமிடங்களாக உணரச் செய்கிறது, அதேசமயம் விறுவிறுப்பில்லாத ஓர் உரையாடல் நேரம் நீண்டு கொண்டு செல்லும் உணர்வை ஏற்படுத்துகிறது. இதற்கான காரணம் மாறுபட்ட மனநிலைகளில் உற்பத்தியாகும் ஹார்மோன்களிலும் நரம்பு தூண்டுதல்களிலும் இருக்கிறது.



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

முக்கியமான உணர்ச்சிமிக்க தருணங்களில், நமது மூளை வேறுபட்ட முறையில் செயல்படுகிறது. மிகுந்த உணர்ச்சிகள் "நேர்மறை அல்லது எதிர்மறை" சில நரம்பு பகுதிகளைத் தூண்டுகின்றன, அவை நமது நேர உணர்வை மாற்றுகின்றன. இந்த மூளையில் ஏற்படும் வேதியியல்



செயல்பாடு, நேரம் போகும் விதத்தை எவ்வாறு நாம் உணருகிறோம் என்பதில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆராய்ச்சிகளின் படி, அட்ரினலின் மற்றும் டோபமின் போன்ற ஹார்மோன்கள் நேரத்தைத் துரிதமாகவோ அல்லது மெதுவாகவோ உணரச்செய்வதில் முக்கிய பங்கை வகிக்கின்றன. இதுவே மிகுந்த மன அழுத்தமுடைய அனுபவங்கள் நேரத்தை நீடிக்கும் உணர்வைக் கொடுக்கின்றன, ஏனென்றால் மூளை ஒவ்வொரு விபரத்தையும் ஆழமாக உணர்கிறது.

நமது மூளையில் நேரத்தை உணர எந்தவொரு சென்சார்களும் இல்லை. மாறாக, அது பல்வேறு முறைகளைக் கொண்டு நேரத்தின் பயணத்தைக் கணக்கிடுகிறது. மூளையின் ஆழத்தில் உள்ள ஒரு பகுதியாகிய இன்சுலார் கார்டெக்ஸ், இந்தச் செயல்முறையில் முக்கிய பங்கை வகிக்கிறது. அது உடல் சிக்னல்கள் மற்றும் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுகிறது, இதனால் நம்மால் நேரத்தை உணர முடிகிறது. நமது மூளையில் உள்ள இன்சுலார் கார்டெக்ஸ் நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் புரிந்துகொள்வதற்கும், அதில் நம்முடைய இடத்தை எப்போதும் உணர்வதற்கும் உதவுகிறது. இது நமது இதயத்துடிப்பு மற்றும் மூச்சுப் பயிற்சி போன்ற உடலின் உள்ளடக்கிய செயல்களையும், வெளியே நம்மால் காணப்படும் மற்றும் கேட்கப்படும் செயல்களையும் இணைக்கிறது. இதில் உள்ள ஆச்சரியம் என்னவென்றால், நாம் மன அழுத்தமான நிலைகளில் இருந்தால், நம்முடைய மூளை எல்லாமே மெதுவாக நடக்கிறது (slow motion) என்று உணரச் செய்யலாம். உதாரணமாக, சிலர் வாகன விபத்து போன்ற ஆபத்தான தருணங்களில், நிகழ்வுகள் மெதுவாக நடந்துகொண்டு இருப்பதுபோல உணர்கிறார்கள். இது ஓர் உயிர்காக்கும் முறையாகும்: நெருக்கடியான தருணங்களில், நம்மை பாதுகாக்க மூளை அதிகத் தகவல்களை எடுத்துக்கொள்ள முயலுகிறது.

காத்திருப்பது பற்றி மக்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதை அவர்களின் கலாச்சாரம் தீர்மானிக்கிறது என்பது மிகவும் சுவாரசியமாக இருக்கிறது. சில இடங்களில், காத்திருப்பது வாழ்க்கையின் ஒரு சாதாரணப் பகுதியாகவே கருதப்படுகிறது, ஆனால் மற்ற இடங்களில், இது எரிச்சலாக அல்லது நேரத்தை வீணாக்குவது போலவே தோன்றுகிறது. உதாரணமாக, வேகமாக இயங்கும் நாடுகளில், காத்திருப்பது பெரும்பாலும் ஒரு பிரச்சனையாகவே கருதப்படுகிறது, ஆனால் பிற கலாச்சாரங்களில் பொறுமையுடன் காத்திருப்பது நல்ல பண்பாகவே பார்க்கப்படுகிறது.


உதாரணமாக, ஜப்பானில் நேரத்தைப் பிடிப்பது மிகவும் முக்கியமானது. ரயில்கள் மற்றும் பேருந்துகள் மிகவும் சரியாக இயக்கப்படுவதால் மக்கள் காத்திருக்க வேண்டிய நிலை அரிதாகவே வரும். ஆனால் கிராமப்புறங்களில் அல்லது நேரத்தைப் பற்றிய தொந்தரவு இல்லாத கலாச்சாரங்களில், காத்திருப்பது பெரிய சுமையாக உணரப்படுவதில்லை.

தொழில்நுட்பம் நம் நேர உணர்வையும், பொறுமையையும் மிகவும் மாற்றியுள்ளது. இன்றைய உலகில், எதையும் ஒரு கிளிக் மூலம் பெற முடிகிறது, எனவே காத்திருப்பதற்கு நம்மிடம் பழக்கமில்லை. விரைவான இணையம், உடனடி விநியோகங்கள், மற்றும் உடனடி சேவைகள் எதையும் உடனே பெற வேண்டும் என்ற நம்பிக்கையை உருவாக்கியுள்ளன. இந்த உடனடி கிடைக்கும் வசதிகள் நம்முடைய எதிர்பார்ப்புகளை உயர்த்தியுள்ளன, அதாவது, எப்போதும் எதையும் உடனே பெற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால், விசித்திரமாக, இந்த வேகமான வாழ்க்கைமுறை, நம்மை அதிகமான மன அழுத்தத்திற்கும், திருப்தியின்மைக்கும் வழிவகுக்கிறது, ஏனென்றால் எப்போதும் வேகமாகவும் சிறப்பாகவும் வேண்டும் என நம் எதிர்பார்ப்புகள் உயர்ந்து கொண்டே இருக்கின்றன. சரி, காத்திருப்பதற்குப் பின்னால் இருக்கும் அறிவியலைப் பற்றி அறிந்தது போதும். காத்திருப்பது நம்மால் தவிர்க்க முடியாத ஒன்றுதான், ஆனால் காத்திருப்பதை எவ்வாறு எளிதாக்கலாம் என்று பார்ப்போமா?

**திசை திருப்பங்களைத் தேடுங்கள்:** ஒரு புத்தகம் படிப்பது அல்லது இசை கேட்பது போன்ற எதையாவது சுவாரசியமானவற்றில் ஈடுபடுங்கள். இது நேரத்தை வேகமாகச் செல்லும் போல் உணரச்செய்கிறது, மேலும் உங்கள் மனதை வேறிடத்துக்குக் கொண்டு செல்லும்.

**நேர்மறையாக யோசிக்கவும்:** காத்திருப்பதை ஒரு சிரமமாகப்

» 20 ஆம் பக்கம் பார்க்க...





## இயேசு கிறிஸ்துவின் பிறப்பு

விண்ணையும் மண்ணையும்
அதின்யாவற்றையும்
உண்டாக்கியவரே
உருவாக்கி உயிர்கொடுத்தவரே
படைப்பில் மகிழ்ந்தவரே

அந்தோ பாவம் பெருகிட
அக்கிரமம் மிகுந்து அன்புதனிந்திட
கசந்த வாழ்வை வசந்தமாக்க
குருதி சிந்தி பாவம் போக்க

பரிசுத்த ஆவியால்
கன்னிமரியாளின்
கருவில் பரிசுத்த உயிர் கொண்டு
வானகம் முழங்க
வாழ்த்திசை இசைக்க
கலங்கரை சுடராய் கதிரவன்
இயேசு ஒளித்தாரே

இயேசுவே!
வாழ்த்துகின்றோம்.
வணங்குகின்றோம்
ஜீவனுள்ள தேவனே
போற்றுகின்றோம்.

வாமினி கெவல்ஸ்பேர்க் (யேர்மனி)



# புதிய கிறிஸ்மஸ்!

சேவியர் (தமிழ் நாடு)

கிறிஸ்மஸ் நெருங்கிவிட்டது என்பதை ஊர் உரக்க அறிவித்துக் கொண்டிருக்கிறது. மால்களுக்குப் போனால் கூரையைத் தட்டுமளவுக்கு உயரமான கிறிஸ்மஸ் மரங்கள் மின்சாரத்தைத் தின்று வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருக்கின்றன. வீதிகளில் தற்காலிகக் கிறிஸ்மஸ் தாத்தாக்கள் விளம்பரப் பதாகைகளோடு அசைந்தாடுகின்றனர். வீடுகளில் நட்சத்திரங்கள் அந்தஸ்துக்கு ஏற்ப அசைந்தாடுகின்றன. கிறிஸ்மஸ் நெருங்கிவிட்டது! அது மகிழ்வினை அறிவித்துக் கொண்டிருக்கிறது.

எனில், கிறிஸ்மஸ் வெறும் ஆனந்தத்தின் மேல் கட்டமைக்கப்பட்டதா ? கொஞ்சம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிந்தைய பெத்லேஹேம் வாசலுக்குச் சென்றால் அங்கே பரபரப்பின் உச்சத்தில் புரண்டு கொண்டிருந்த நகரைப் பார்க்கலாம். எல்லோரும் பிஸி பிஸி என ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே தாய்மை நிலையிலிருந்த அன்னை மரியாளை எங்கே தங்க வைப்பதெனத் தெரியாமல் கணவர் யோசேப்பு கலங்குகிறார். கடைசியில் சத்திரங்கள் நிராகரித்து விட தொழுவத்தில் அடைக்கலமாகின்றனர்.

சத்திரக்காரர்கள் மோசமானவர்கள் அல்ல ! அவர்கள் கொடுமைக்காரர்கள் அல்ல ! ஆனால் பிஸி மனிதர்கள். அவர்களுக்கு வேறெதற்கும் நேரமில்லை. வேலை வேலை என ஓடிக்கொண்டிருந்தார்கள். மக்களின் பிஸி வாழ்க்கை இயேசுவை வெளியே தள்ளி கதவை அடைக்கிறது. அது நமக்கான முதல் எச்சரிக்கை. நமது பிஸி வாழ்க்கை, நமது வாழ்விலிருந்து, இல்லங்களிலிருந்து, இதயங்களிலிருந்து இயேசுவை வெளியேற்றி தொழுவத்துக்கு அனுப்பி வைக்கிறதா ?

அடுத்த ஒரு நிகழ்வில், மழலை இயேசு சிறுவனாய் வீட்டில் இருக்கிறார் அவரைக் கண்டு பணிந்து கொள்கின்றனர் தூரதேச ஞானியர். விலையுயர்ந்த பரிசுகளையும் வழங்குகின்றனர். கிறிஸ்மஸ் பரிசளிப்பின் காலம். ஆனால் எல்லோருக்கும் அந்த மகிழ்ச்சி வாய்க்கிறதா ? தனக்கு எதிராய் ஒரு அரசன் பிறந்திருக்கிறானா என, ஏரோதின் வன்மத்தின் கட்டளை அந்த ஊரில் பூட்ஸ் கால்களை இறக்கியது. இரக்கத்தைக் காலடியில் புதைத்தவர்கள், பாலகர்களைத் தேடி வாள்களோடு அலைந்தார்கள். இரண்டு வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளைகள் எல்லாம் யானை மிதித்த ரோஜா மலராய் அழிந்தன. "இராமாவிலே ஒரு குரல் கேட்கின்றது ஒரே புலம்பலும் அழுகையுமாய் இருக்கின்றது." என்ற இறைவாக்கினர் எரேமியாவின் வார்த்தைகள் எத்தனை வலி மிகுந்தவை என்பதை பெத்லஹேம் பதற்றத்துடன் எதிர்கொண்டது.

கிறிஸ்மஸ் ஒரு தெய்வக் குழந்தையின் வருகையையும், பல பெத்லேகேம் குழந்தைகளின் அழுகையும் இணைத்துக் கட்டிய வரலாறு. இன்றும் நமது கொண்டாட்டத்தின் வீதிகளில் எத்தனையோ பேர் இழப்புகளின் வலி சுமந்து அலைகிறார்கள். ஆறுதல் கொடுக்க யாராவது வரமாட்டார்களா எனும் ஏக்கத்தில் தவிக்கிறார்கள். நிராகரிப்பின் வலியும், புறக்கணிப்பின் வலியும் சுமந்து கலங்குகிறார்கள். நமது பார்வை, இயேசுவுக்கு பட்டுத் தொட்டில் கட்டுவதில் மட்டும் இருந்தால் கிறிஸ்மஸ் அர்த்தமிழக்கிறது. அந்த தெருவோர அழுகைக் குரல்களுக்கு ஆறுதல் காட்டுவதில் இருந்தால் கிறிஸ்மஸ் அர்த்தம் பெறுகிறது !

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் காலம் தான். அது எல்லோருக்குமான கொண்டாட்டமாய் இருக்க வேண்டும். கிறிஸ்மஸ் மகிழ்ச்சியின் காலம் தான், அது எல்லோருக்குமான மகிழ்ச்சியாய் மாற வேண்டும்.

கிறிஸ்மஸ் மீட்பின் தருணம் தான், அது எல்லோருக்குமான மீட்பாய் மலரவேண்டும். அதற்காக நாம் இதயத்தைத் திறந்து இறைவனை வேண்டுவது மட்டுமல்ல, கரங்களைத் திறந்து எளியவர்களையும் தீண்டவேண்டும். தெருக்களில் இனிமேல் சிரிப்பின் பேரொலி எழட்டும். ஏழைகள் இனிமேல் தோழர்கள் ஆகட்டும். அப்போது கிறிஸ்மஸ் அர்த்தப்படும் !

**அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்து !**

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## காத்திருக்கும் போது

பார்க்காமல், தளர்ச்சி அல்லது தியானத்திற்கு ஒரு வாய்ப்பாகப் பாருங்கள். ஒரு சிறிய இடைவெளியை அனுபவிக்கவும், உங்கள் மனநிலையை மாற்றவும் இது உதவும்.

**மனதை சுமுகமாக்குதல் பயிற்சி செய்யுங்கள்:** மனநிலையைச் சீராக வைத்திருக்க உதவும் தியானம் மற்றும் மன அமைதி பயிற்சிகள் செய்யலாம். நிகழ்காலத்தில் கவனம் செலுத்தும்போது, காத்திருப்பு நேரம் குறைவாக உணரப்படும், மேலும் இனிமையாகவும் தோன்றும்.

**செயல்பாடுகளில் ஈடுபடுங்கள்:** உங்களால் முடிந்தால், உங்கள் சுற்றியுள்ள நிகழ்வுகளில் ஈடுபடுங்கள். உதாரணமாக, வரிசையில் காத்திருக்கும் போது இருக்கக்கூடிய திரைகள் அல்லது செயல்பாடுகள் உங்கள் கவனத்தை ஈர்த்து நேரத்தை வேகமாகச் செல்லச் செய்யும்.

காத்திருப்பது தினசரி வாழ்க்கையின் வெறுப்பூட்டும் இடையூறாக மட்டுமே இல்லாமல், நம் மூளையின் செயல்பாடுகளைப் புரி



ந்துகொள்வதற்கான வாய்ப்பாகும். மேலும், நம் உணர்ச்சிகள் எவ்வாறு நேரத்தை உணர்வதைப் பாதிக்கின்றன என்பதைக் காட்டுகின்றது. காத்திருப்பதைத் தியானம் செய்யும் அல்லது சிந்தனை செய்யும் ஒரு சந்தர்ப்பமாகக் கருதினால், அது ஒரு நல்ல அனுபவமாக மாறும். காத்திருப்பின் பின்னால் உள்ள காரணங்களை அறிந்து கொண்டு, நாங்கள் அதை எவ்வாறு கையாள்வது என்பதைப் புரிந்து கொண்டு, அதனை நன்றாக அனுபவிக்கக்கூட முயற்சி செய்யலாம். என்ன, முயற்சி செய்வோமா? காத்திருந்து பார்ப்போம்".




# வாழ்த்துகிறோம்

09-11-2024 இல் நடைபெற்ற நெதர்லாந்து, றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலையின் வாணி விழாவிலே அனைத்துலகத் தமிழ்மொழித் தேர்வில், செல்வன். ஜனன் கோடீஸ்வரநாதன், செல்வி.துர்க்கா சதயகுமார் இருவரும், ஆண்டு (12) பன்னிரண்டு தேர்வை திறமைச் சித்தியுடன் பூர்த்தி செய்தமைக்காக மதிப்பளிக்கப்பட்டு வாழ்த்தி இருந்தார்கள்.
இவர்கள் இருவரையும் நாமும் நெஞ்சம் நிறைய வாழ்த்துகிறோம்.

அன்புடன், வ.கதிர்காமத்தம்பி - க. கமலாதேவி,
றோர்மொண்ட், நெதர்லாந்து

**அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்**



# 16 வயதுக்கு மேற்பட்டோர் கல்வியும் பெற்றோர் தலையீடும்

அறிவுக்கண்ணைத் திறந்திடும்
விரிவாய் உலகைக் காட்டிடும்
வித்தியார்த்திகள் ஆகவும்
விஷயார்த்திகள் ஆகவும்
வாழவழிகாட்டும் கல்வி

## 16 வயதுக்கு மேற்பட்டோர் கல்வியும் பெற்றோர் தலையீடும்




கௌசி சிவபாலன்
(யேர்மனி)


அணுவைப் பகுப்பாய்ந்த விஞ்ஞானிகளிலிருந்து உளத்தைப் பகுத்தாயும் உளவியலாளர் வரை இளையோர் கல்வித் தேர்வு அவர்கள் கையிலேயே ஒப்படைக்கப்படல் வேண்டும் என்று கூறுகின்றார்கள். கற்றல் ஒருபுறம் கற்பித்தல் ஒருபுறம் இருக்க இடையில் பெற்றோர் பிள்ளைகளின் கல்வியில் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டியது அவசியமில்லை. பிள்ளையைப் பெற்றுவிட்டதற்காக அவர்கள் உணர்வுகள் பெற்றவர்களுடையதாக முடியுமா? பிறக்கும் போதே கட்டுச் சோற்றுடன்(பால்) வந்து பிறந்தவர்கள் அவர்கள். தங்கள் முயற்சியினால் வளர்ச்சிப்படிகள் கண்டவர்கள். அவர்கள் வளர்வதற்குப் பெற்றோர்கள் ஒத்தாசையாய் இருந்திருக்கலாம். அவர்களுக்கூடாக வந்தவர்கள் என்பதற்காக அவர்கள் உணர்வாக பெற்றவர்கள் மாறுதல் கூடாது. அவர்கள் அவர்களுக்காகவே பிறந்தவர்கள் என இந்திய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் கூறியிருக்கின்றார். இவர்கள் தலைமுறை இடைவெளியில் கணனி உலகில் உலகத்தையே காலடியில் வைத்திருப்பவர்கள். அவர்களிடம் பெற்றவர்கள் கற்க வேண்டியது ஏராளம் இருக்கிறது. எனவே பெற்றோர்களே! கற்றுக் கொள்ளுங்கள். கல்வித் தேர்வுக்கு வழிவிடுங்கள்.

பிறந்த குழந்தையை தனியறையில் தூங்கவிடுவது தொட்டு பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரையில் தன்னம்பிக்கை போதிக்கும் கலாச்சாரத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாடசாலை சீருடை பிள்ளைகளின் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்று சீருடையையே அறிமுகப்படுத்தாத ஜேர்மனி நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறான சூழ்நிலையிலுள்ள இளவயதினர் ஒவ்வொரு நடவடிக்கையிலும் (உதாரணம்: உணவு உடை பொழுதுபோக்கு) தமது ஆக்கிரமிப்பைப் பயன்படுத்தும் பெற்றோர் தாம் விரும்பிய கல்வியைத் தெரிவு செய்வதற்குரிய அடிப்படை கல்விச் சுதந்திரம் மனித உரிமையும் மறுக்கும் போது பெற்றோரிடம் ஒரு எரிச்சலை ஏற்படுத்தி பெற்றோர் பிள்ளை உறவிலே ஒரு பிளவை ஏற்படுத்துகின்றனர். பிள்ளைகளோ பல்கலைக்கழகங்களைத் தெரிவு செய்கின்றபோது அப்பாடி தப்பிவிட்டோம் என்று தொலைதூரத்திலுள்ள பல்கலைக்கழகங்களைத் தெரிவுசெய்கின்றனர்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கனவு இருக்கின்றது. தமது கற்றல் வலு எத்தகையது. எது தம்மால் முடியும் என்னும் உண்மையை அவர்களே அறிந்தவர்கள். கற்கக் கசடறக் கற்க அதாவது தெளிவுற ஒரு விடயத்தைக் கற்க வேண்டும். அப்படிக் கற்கவேண்டுமானால் ஒன்றில் முழுமனதுடன் ஈடுபட வேண்டும். விருப்பமான துறையென்றாலேயே முழுமனதுடன் ஈடுபடமுடியும். அதில் பரிபூணர வெற்றியையும் பெற முடியும். அதில் உயரத்தைத் தொட முடியும். எனது மகன் டொக்டர் எஞ்சினியர் என்று கூறுவதில் எமது பெற்றோர்களுக்கு ஒரு பெருமையிருக்கிறது. இது எங்கள் நாட்டிலிருந்து விமானம் ஏறும் போது விட்டுவிட்டு வந்திருக்க வேண்டிய பெருமை. டொக்டர் எஞ்சினியர் கணனி இவற்றை விட்டால் மற்றைய எதைப் படித்தாலும் பயனில்லை என்னும் தவறான அபத்தமான கருத்து எம்மவரிடையே இருக்கின்றது. இவற்றிற்குப் படிக்காவிட்டால் எங்கள் மானம் தான் போகும் என்று பண்ணுவதனால் ஆவதென்ன? சொந்த விருப்பம் கற்கின்ற துறை என்று இரட்டைச் சூழலில் கற்க வேண்டிய நிலை இளவயதினருக்கு ஏற்பட்டு அவர்களுக்கு மனஅழுத்தம் ஏற்படுகின்றது. கல்விப்பழு சிலவேளை தற்கொலை செய்ய வேண்டிய நிலைக்கும் ஆளாக்கும்

அம்மா எனக்கு இரத்தைக் கண்டால் பிடிக்கவில்லை. நான் ஜேனலிஸ்ட் படிக்கப் போகின்றேன். அது எனக்கு நன்றாகப் பிடித்திருக்கிறது என்னும் மகளிடம் ‘சும்மா இருடி நான் பி. ஏ லிட்ரிசர்.

28 ஆம் பக்கம் பார்க்க...




மணிவிழாக்காணும் அகரம் த.இரவீந்திரன் அவர்களுக்கு
வெற்றிமணிப் பத்திரிகையின் வாழ்த்துகள்

எனது இனிய ஊடக நண்பரும், ரவி மாஸ்ரர் என யாவரும் அன்பாக அழைக்கும்,
ETR வானொலி, அதிபர், அகரம், அகரதீபம், ஆசிரியர்,
திரு.த.இரவீந்திரன் அவர்கள் மணிவிழாக் காண்கின்றார்.

24.12.2024 தனது 60 வது பிறந்தநாளில், அவர்சார்ந்துள்ள துறைகள்
யாவிலும், மேன்மையுற வாழ்த்துகின்றோம். விடாமுயற்சியும்,
துணிவும், அவரிடம் கண்ட இரு பெரும் சிறப்பு இயல்புகள்.


2019 ஆண்டு அவருக்கு வெற்றிமணி “வாழ்நாள் சாதனை“ வழங்கிக் கௌரவித்தமை
பொருத்தமானதே என இன்றும் மகிழ வைக்கின்றது அவர்தம் விடாமுயற்சிகள்

அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music




வாழ் நாள் சாதனையாளர்
விருது 2019






# நெதர்லாந்தில், றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா





நெதர்லாந்து, றோர்மொண்ட் தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் நடாத்தும் தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா 09-11-2024 சனிக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு பிரதம விருந்தனராக றோர்மொண்ட் நகர பிதா திருமதி யொலண்டா கோக்டண்டர்ஸ் (Mrs. Yolanda Hoogtanders) அவர்களும், சிறப்பு விருந்தினராக றோர்மொண்ட் ஸ்ரீ சிவசுப்ரமணிய தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது.

2023/2024 கல்வியாண்டில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் மொழித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும், அதிதிறன், மிகுதிறனில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கிண்ணங்களும் வழங்கப்பட்டது. மேலும், இந்த விழாவில் 2023/2024 கல்வியாண்டில் ஆண்டு 12 யை பூர்த்தி செய்த மாணவர்களான செல்வன். ஜனன் கோடீஸ்வரநாதன், செல்வி துர்க்கா சதயகுமார் ஆகியோரை றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை நிர்வாகிகள் விருது வழங்கி மதிப்பளித்தும் இருந்தார்கள்.




Richi Travels | Auf den Kempen 4 41352 Korschenbroich

Tel.: +49 2161 4075090 | Mobile: 0174 9644965 | E-Mail: info@richi-travels.de

# மிருகங்களா குழந்தைகளை பராமரித்தவை?

நாட்டிய கலாநிதி
கார்த்திகா கணேசர்
(அவுஸ்திரேலியா)





தாய்மையின் உன்னதப் பாசத்தை மிருகங்களிடமும் கணமுடியும். ஆனால் மனித நாகரீக உலகில் குப்பைத் தொட்டியில் குழந்தைகள் கண்டெடுக்கப் படுகின்றன. அனாதை இல்ல வாசலில் குழந்தைகள்! ஏன் இந்தக் குழந்தையைப் பெற்றெடுத்தவள் தாய் இல்லையா? அவளுக்கு பாசம் கிடையாதா? மிருகங்களிலும் மோசமானவளா அந்தத் தாய்? இல்லவே இல்லை. அவளை அந்த நிலைக்கு ஆளாக்கியது இந்த நாகரீக சமுதாயமே. ஒருவள் திருமண பந்தத்திற்கு உட்படாது கருத்தரிப்பதோ குழந்தையைப் பெற்றுக் கொள்வதோ சமுதாயம் ஏற்று கொள்ளாத ஒன்றாக இருந்தமையே இத்தகைய கொடுமைகள் நடக்கக் காரணமானது. அவ்வாறு குழந்தையைப் பெற்று விட்டவள் அவமானப் படுத்தப்படுகிறாள். அதற்கு முகம் கொடுக்க பயந்தே குழந்தையை அறியாப் பருவத்தில் அனாதரவாக விட்டு விடுகிறாள். இந்தக் கொடுமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல, புராணக் காலத்தில் குந்திதேவியால் கைவிடப் பட்ட கர்ணன் கதை நாம் அறிந்ததே.

காளிதாசனின் நாடகங்களிலே மிகப் பிரபலமானது சாகுந்தலம். சாகுந்தலை என்ற காவிய நாயகியோ குழந்தைப் பருவத்திலே அன்னப் பட்சிகளால் பராமரிக்கப்படுகிறாள். கண்ணுவ முனிவர் அவளைக் கண்டெடுத்து தனது செல்லக் குழந்தையாக வளர்கிறார். அன்னப் பட்சி வட மொழியிலே 'சாகுந்தலம்' ஆகும். அன்னப் பட்சிகளால் வளர்க்கப்பட்ட பெண் ஆதலால் 'சாகுந்தலை' எனப் பெயரிட்டு வளர்க்கப்பட்டாள். என்ன அன்னப் பட்சி வளர்ப்பது வெறும் கற்பனை எனத் தோன்றுகிறதா? மனிதக் குழந்தைகளை மிருகங்கள் பறவைகள் பராமரித்து வளர்ப்பதா? அழகான கற்பனை என எண்ணுகிறோம். ஆனால் மனித ஜென்மங்களால் அனாதரவாக விடப்பட்ட மனிதக் குழந்தைகளை மிருகங்கள் பராமரித்தமை நிஜ வாழ்வில் நடந்த உண்மையே. அண்மையில் Geographic channel- இல் இதை விரிவாகக் காட்டினார்கள்.

றஷ்ய நாட்டிலிருந்து பிரிந்த நாடே யுக்ரேன். இங்கு போதை மருந்துக்கு அடிமையாகிறார்கள் பிள்ளையைப் பெற்ற பெற்றோர். வீட்டில் வளர்ப்பு நாயும் இருந்துள்ளது. நட்டாலியா என்ற பெண் குழந்தை பெற்றோர் கவனிப்பு அற்றவளாக நாய்களின் அரவணைப்பிலே, நாயின் ஆதரவில் நாய்களால் வளர்க்கப் படுகிறாள். தனக்கு விவரம் தெரிந்த நாள் முதலாக நாய்களுடன் படுத்து அவற்றின் அரவணைப்பிலும் ஆதரவான அவற்றின் சூட்டிலும்தான் வளர்ந்தாள் என அவளே கூறுகிறாள். இந்த நிலையிலே எவ்வாறோ வெளி உலகுக்கு இது தெரியவர அவளை அரச சேவையாளர் நாய்களில் இருந்து பிரித்து எடுத்துச் செல்வதை விடியோ படமாகக் காண்பித்தார்கள். இவ்வாறு பிரித்து எடுத்துப் போனபோது இவளுக்கு தனது கைகளை பாவிக்கத் தெரியவில்லை. நாய்கள் மாதிரியே குனிந்து வாயால் உணவை உண்டாள். இவ்வாறான நிலையில் கண்டெடுக்கப்பட்டவளு க்கு, படிப்படியாக சமுக சேவையாளரால் மனிதப் பழக்க வழக்கங்கள் பயிற்றப்படுகின்றன. அதுவரை அவளுக்குப் பேசத் தெரியாது. படிப்படியாக அவள் மனித சமுதாயத்துடன் ஒன்றி வாழக்கூடியவளாக பயிற்றப்படுகிறாள். இப்போது அவள் பாடசாலையில் படிக்கிறாள்.

அவளை உற்று நோக்கும்போது மற்றக் குழந்தைகளில் இருந்து மாறுபட்டவளாகவே எமக்குத் தோன்றுகிறாள். 6 வயது வரை மனித சகவாசம் அற்று வாழ்ந்ததால் குழந்தை இயற்கையாக மனிதரிடம் இருந்து, பார்த்து, கேட்டு, அறிய வேண்டியவை, அதன் மூலம் பெறும் இயற்கையான மூளை வளர்ச்சி அத்தனையும் அவள் பெறாதவையே. ஒரு குழந்தையின் மூளை ஐந்து வயதுக்கு முன் மிகத் துரித வளர்ச்சி அடைகிறது. மனித மூளை அதன் பின் அத்தனை வேகமாக வளராது. இவை யாவும் அவளை மீட்டு புதிய வாழ்வுக்கு பயிற்றும்போது தடையாக இருந்ததாக வல்லுநர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். இதற்கு மேலும் ஒரு சிறுவனோ குரங்குகள் ஆதரவில் வளர்ந்துள்ளான்.

தென் ஆப்பிரிக்கக் காட்டிலே பையன் ஒருவன் குரங்குக் கூட்டத்துடன் காணப்படுகிறான். அவனுக்கு அப்பொழுது வயது எட்டு இருக்கலாம். விக்டர் அவனைக் கண்டு வீட்டிற்கு அழைத்து வந்துவிடுகிறார். அதுவரை அவன் பேச்சு மொழி எதுவும் தெரியாது, குரங்குகளில் ஒன்றாகவே வாழ்ந்தவன். விக்டர் மனைவி மேரி அந்த பையனைக் கண்டு திகைக்கிறாள். எந்தவித மனித சுபாவமும் அற்ற அவனை எவ்வாறு வீட்டிலே வைத்திருப்பது? இதை ஏன் இங்கு கொண்டு வந்தாய்? என கணவனிடம் வாதிடுகிறாள். ஆனால் ஒரு மனிதப் பையனை மீண்டும் அனாதரவாக காட்டில் விட மனம் இடம் தரவில்லை. காலப்போக்கில் அவன் மொழியையும் ஓர் அளவு புரிந்து மனிதராக வாழப் பழகிக்கொள்கிறான்.

தொலைக்காட்சியில் அவனை நாம் பார்க்கும் போது அவன் வயது 16. வளர்ந்த இளைஞன். அவனுக்கு சரியாகப் பேச முடியவில்லை. ஏதோ சிறிது திக்கி கொச்சையாகப் பேச முடிந்தது. அவன் பேச்சை அவன்




குடும்பம் புரிந்துகொள்கிறது. ஆனால் கிட்டார் வாத்தியத்தை வாசிக்கக் கற்றுக் கொண்டான். வைத்தியப் பரிசோதனையில் அவன் தலையில் பலமாக அடிபட்டதால் அவன் பேச்சு பாதிக்கப் பட்டுள்ளது என வைத்தியர் ஆய்வில் கண்டறிந்தனர்.

இவன் குரங்குகளே தன்னை வளர்த்ததாக கூறுகிறான். அவன் கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு அவனை ஆய்வாளர்கள் அழைத்து சென்றபோது, அந்த இடத்தைக் கண்டு அவன் உணர்ச்சிவசப்பட்டதாக கூறப்பட்டது.

ஆய்வாளர்களின் கணிப்பில் இவன் குரங்குகளால் வளர்க்கப் படவில்லை. ஆனால் குரங்குக் கூட்டம் இவனை தம் கூட்டத்துடன் இணைத்துக் கொண்டன. இந்தச் சிறுவனை அவை விரட்டி அடிக்கவில்லை. குரங்குகள் உண்ட மீத காய் கனியை இவன் உண்டு வாழ்ந்துள்ளான் என கணிக்கின்றனர். மேலும் இவன் மிகச் சிறிய வயதில், மூன்றே வயதிருக்கும் போது மாற்றாம் தாயால் வீட்டை விட்டு விரட்டப்பட்டுள்ளான். காட்டிற்குள் ஓடிய குழந்தை குரங்குக் கூட்டத்துடன் வாழ்ந்ததே உண்மை. குரங்குகளே அவனுக்கு வேண்டிய பாதுகாப்பை வழங்கி உள்ளன.

1920-களில் இந்தியாவில் வாழ்ந்த பிரித்தானிய பாதிரியார், ஓநாய்களால் வளர்க்கப்பட்ட இரட்டைக் குழந்தைகளான பெண் குழந்தைகளை மீட்டு எடுத்துவந்து பவானி, கமலா எனப் பெயரிட்டு வளர்க்கிறார். அவர்களின் படத்தை பிரித்தானியா அனுப்பி உதவி கோரி உள்ளார். பிரித்தானிய ஆய்வாளர்கள் குழந்தைகளை ஓநாய் வளர்க்க முடியாது.

28 ஆம் பக்கம் பார்க்க...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

தாயகத்திலிருந்து வெளிவரும் தமிழர் பொருண்மியம்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பெற்றுக் கொள்ள QR code இனை scan செய்து whatsapp குழுவில் இணையுங்கள்

+94 777 304 010
+94 70 267 5575








பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)


## தீயவற்றைப் புதையுங்கள்!

மனித வாழ்க்கை கசப்பான பட்டறிவுகள் நிறைந்தது. ஒவ்வொருவரது புன்னகைக்கும் பின்னால் ஏமாற்றங்களும் தோல்விகளும் நிறைந்திருக்கும். எப்போதோ நடந்த இனிமையான நினைவுகளே மீண்டும் மீண்டும் தோன்றி உள்ளத்தைப் பாராமாக்குகையில் ஏமாற்றங்களும், துரோகங்களும், வலிகளும், இழப்புகளும், தோல்விகளும் நிறைந்த நினைவுகள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை யாரும் சொல்லாமலே நாம் உணர்ந்துகொள்ளலாம்.

# ஒவ்வொருவரது புன்னகைக்கும் பின்னால் ஏமாற்றங்களும் தோல்விகளும் நிறைந்திருக்கும்

தீய நினைவுகள் நம்மிடத்தில் தோன்றுவதன் மூலமாக நம்மைச் சோகத்தில் ஆழ்த்தி நம் அன்றாட வேலைகளைச் செய்ய முடியாமல் நம்மைக் கட்டிப்போட்டுவிடுவதோடல்லாமல் நம்மோடிருக்கும் நிகழ்கால மனிதர்களையும் பாதித்துவிடுகின்றது. நினைவுக்கு வரும் துயர நிகழ்வுகளை நாம் சரியாகக் கையாள வேண்டும். இல்லையென்றால் இவை தொடர்ந்து வந்து நம்மை இயலாமை மனிதர்களாக்கி இவ்வுலக வாழ்வை இருளாக்கிவிடும்.எத்தகைய கடினப் பொழுதுகளையும் நாம் கடந்தாக வேண்டும். இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து நம்மை அலைக்கழிக்கும்.இதுவே மனித வாழ்வின் நியதி. அதைச் சரியாகக் கையாள்வதே வாழ்க்கைப் பாதையைச் சரியாகக் கொண்டு செல்வதற்கான உக்தியாகும். நம்மை விரக்திக்குள்ளாக்கும் துயர நினைவுகளிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்வதென்பது நம் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது ஆகும்.பழைய துயர நினைவுகளை நாம் மீண்டும் மீண்டும் நினைப்பதால் நம் உள நிம்மதியே பாதிக்கப்படும். நம் நிகழ்கால வாழ்க்கை நிம்மதியாக மாற வேண்டுமெனில் நம் கடந்தகாலத் துயரங்களை நாம் புதைத்தாக வேண்டும். உண்மைகளை மறக்கவும் மறுக்கவும் முடியாதென்றாலும் துயர்மிகு உண்மைகளை நாள்தோறும் நினைவுகளில் வளர்க்காமல் கடந்தகாலப் புதைகுழியிலேயே புதைத்திடல் வேண்டும்.

சமாதியாக்கிவிடுதல் ஒன்றும் உடனேயே சாத்தியமில்லைதான் என்றாலும் நினைவுகளில் நீரூற்றி வளர்க்காமல் வேறு செயல்களிலும் நல்ல மனிதர்களோடும் அதை மறத்தல் வேண்டும்.

பின்வரும் வழிகளில் உள்ளத்தைக் கையாள்வதனூடாக நம்மைத் துயரத்தில் தள்ளும் நினைவுகளில் இருந்து வெளி வரலாம்.

★ உள்ளத்தைப் புதிய பாதையில் செலுத்–திப் புதிய குறிக்கோள்களை அமைத்துக்கொள்தல் வேண்டும்.

★ உங்களை ஏமாற்றிய மனிதர்களையோ, சூழ்நிலைகளையோ,தோல்விகளையோ எண்ணாமல் அந்த நேரத்தில் நமக்குத் துணையாக இருந்த மனிதர்களை நினைவில் கொண்டு நீங்கள் எத்தகைய நற்பேறு வாய்ந்தவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

★ கடினமான சூழ்நிலைகளிலும் யாருமற்றுத் தனித்திருந்தீர்களானால் அத்தகைய சூழ்நிலையைத் தாங்கும் சக்தியை நீங்கள் கொண்டிருப்பதற்காய் உங்களுக்கும் இந்தப் பிரபஞ்சத்திற்கும் நன்றி கூறிக்கொள்ளுங்கள்.

★ கற்பதற்குக் காலமில்லையென்பதால் உங்களுக்குப் பிடித்த புதிய திறன்களைக் கற்பதில் உள்ளத்தைச் செலுத்தி அமைதியை நாடுங்கள்.

★ தியானங்கள் மூலமாக உள்ளத்தை ஒருமைப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள்.

★ நம்பிக்கை நிறைந்த ஒருவரிடம் உங்கள் துயரங்களைப் பகிர்ந்துகொள்வதனூடாக உள அழுத்தத்தைக் குறைக்கலாம். ஆனாலும் தேர்ந்தெடுக்கும் நபர் குறித்து விழிப்புணர்வுடனேயே இருங்கள்.

★ இறைநம்பிக்கை உடையவராக இருந்தால் இறைவனோடு சண்டை போடுவதற்காக வேனும் ஆலயம் செல்லுங்கள். அந்தச் சூழ்நிலை உங்கள் உள்ளத்தற்கு இதமாக அமையலாம்.



★ செலவுதானென்றாலும் இயன்றளவு உங்களால் முடிந்த பயணங்களை மேற்கொள்ளுங்கள். புதிய சூழ்நிலைகளும், புதிய மனிதர்களும் உங்களுக்குப் புதிய பட்டறிவைத் தரக்கூடும்.

★ உங்கள் உள்ளத்தில் தோன்றுவனவற்றை மனிதர்களிடத்தில் சொல்லும் நம்பிக்கை வரவில்லை என்றால் வார்த்தைகளாகவோ, எழுத்துகளாகவோ கவிதைகளாகவோ வெளிப்படுத்துங்கள். நினைவுகளானது உள்ளே இருக்கும்வரைதான் உள்ளத்தை அழுத்திக்கொண்டே வலியை அதிகமாக்கும்.அதை வெளியேற்றுவதற்கான வழியைக் கண்டறிந்தீர்களானால் பாதி வெற்றியை எட்டிவிடுவீர்கள்.உளச் சுமையை எழுத்துகளாக்கிக் காகிதத்தில் கொட்டிவிடுங்கள்.சுமை காணாமல் போய்விடட்டும்.

★ உங்கள் கடந்த காலத்தோடு நிகழ்காலத்தை ஒப்பிட்டு அதுபோல் நடந்துவிடுமோவென முடிச்சுப்போட்டு மேலும் குழப்பத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். கடந்தகாலம் கடந்ததாகவே போய்விட்டது. அதை நிகழ்கால மனிதர்களிடத்தில் தேடி மேலும் உளஉளைச்சலுக்கு ஆளாகாதீர்கள்.

★ உங்களுக்கு நடந்த தீயவைகளிலிருந்து கற்றுக்கொண்ட நல்லவைகளைப் பட்டியலிடுங்கள். அவை தீயவற்றிலும் நல்லவற்றைக் காணும் உளப் பக்குவத்தைத் தரும்.

★ அதிகம் நாட்டமுள்ள பொழுதுபோக்குகளில் உங்கள் சிந்தனையைத் திருப்புங்கள்.இசை,

28 ஆம் பக்கம் பார்க்க...




(சிறுகதை)

# 'ஆசைமுகம் மறந்து...'

**து**ரிதகதியில் கைகள் இயங்கிக் கொண்டிருக்க ஒவ்வொரு உணவுப் பொதியையும் ஒரு அழகுணர்வுடன் தயார் படுத்திக் கொண்டிருந்தாள் பகீரதி.

வெண்மை நிறமான கடதாசிப் பெட்டி தான் அவளது தெரிவு. இயன்றளவில் பிளாஸ்டிக் பாவனை குறைய வேண்டும். லஞ்ச் பேப்பரை அதற்குள் சமச்சீருடன் வைத்து அளவான கரண்டியினால் மூன்று கரண்டி வெண்சம்பா சோறு. முத்துமுத் தான பதத்தில்.

முதலில் மேல்உச்சிப் பக்கமாக நட்ட நடுவில் குறுணியாக வெட்டிச் சமைத்த கோழி இறைச்சிக் கறி. அரைத்த இஞ்சி உள்ளி தக்காளி தாளிதப் பக்குவத்துடன் கடைசியாக கொஞ்சமாக நல்லெண்ணெய் விட்ட மினுமினுப்புடன் பிரட்டல் .



படங்கள்: யோ.சாந்தி

அதற்குத் தோதாக வலது பக்கச் சாய்வுக் கோணத்தில், தாளித்துக் கொட்டி தேசிப்புளி விட்ட வெண்மஞ்சள் நிற கத்தரிக்காய் பால்கறி. அது மஞ்சள் என்றால் இடது பக்கம் சமச்சீரான கோணத்தில் தேங்காய் பூ போட்ட பீட்றூட் வறை. மீண்டும் இடதுபுறமாக அதற்குக் கீழே பருப்புக் கறி. வலது புறமாக மிளகாய் தூள் பொடி போட்ட புடலங்காய் கூட்டு இளம்சிவப்பு நிறத்தில். அப்பளம் மோர் மிளகாய் தனியாக.

பார்த்தால் நிறக்கலவையே அட்ட காசமாக பிள்ளைகளை வாயூற வைக்க வேண்டும். வயிறாற உண்ண வேண்டும். அளவான நியாயமான விலையில். இதுதான் பிளான். சத்துக்கும் நிறத்துக்கும் அமைய நாளுக்குநாள் மரக்கறிகள் மாறுபடும். கோழிக்குப் பதில் மீன் அல்லது முட்டை. பக்கத்திலிருந்து உதவிகள் செய்து கொண்டிருந்த சுமித்திராவும், செல்வியும் இன்று ஊர்த்துளாவாரம் ஏதுமின்றி இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். பகீரதி சில பொதிகள் தயார் செய்தபின் மிகுதியை அதே மாதிரி சுமித்ரா செய்து முடிப்பாள்.

மொத்தம் ஐம்பத்தொரு பொதிகள்.

எல்லாம் தயாரானதும் எட்ட நின்று அவற்றின் அழகை பல கோணங்களில் தானே ரசிப்பாள். செல்பியாக படமும் எடுப்பாள்.

கண்கள் இலேசாகக் கலங்கின. 'இதற்குத் தானே அன்று ஆசைப்பட்டாய் பாலகுமாரா' என்ற வரிகள் மனதின் தொலை தூரத்தில் எங்கோ ஒலித்தன.

இளவயதின் தீராத மன ஏக்கங்கள் ஆண்டாண்டு காலமாகத் தொடர்வது ஒன்றும் புதினமல்ல. பாடசாலை நாட்களில் தனக்கிருந்த ஏக்கத்தை இன்று பிறருக்குச் செய்தாவது தீர்க்கும் பகீரதியின் ஏக்கமும் நியாயமானதுதான்.



கடந்தகால நினைவுகளால் மனம் கனத்திருக்க அம்மாவின் குரல் அறைக்குள் இருந்து கேட்டது.

'இங்கை ஒருக்கா வந்திட்டுப் போவன் பிள்ளை . எனக்கு நெஞ்சுக்குள்ளை இறுக்கிற மாதிரி இருக்குது .படபடவெண்டு அடிக்குது. டொக்டர் மாருக்கும் விளங்காத என்ன கோதாரி பிடிச்ச வருத்தம் எண்டு விளங்கேல்லை. எழும்பேலாம தலை உலாஞ்சுது.

பல்ஸ் விட்டு விட்டு அடிக்குது. கைகால் எல்லாம் குளிர்ந்து போச்சுதம்மா. ஒருக்கா என்னெண்டு பாரன் பிள்ளை'.

அம்மாவின் குரல் இறைஞ்சியது.

ஆனால் அது பிரமை என்று பகீரதிக்கு தெரியும். இன்று மட்டுமா இந்தக் குரல் கேட்கிறது.

'உங்களுக்கு எப்பதான் வருத்தமில்லை? நாற்பது வருசமா இருக்கிறதுதானே. கேட்டு கேட்டு எனக்கு காதும் புளிச்சுப் போச்சுது. புலி வருது புலிவருது எண்டு ஒருநாளைக்கு உண்மையா வரேக்கை தெரியாமதான் போகும். அதென்ன , அண்ணை இங்கை வாற நாளில மட்டும் உங்களுக்கு வருத்தமில்லாமை போறதோ? குடுகுடுவெண்டு ஓடிப்போய் சிரிச்சுக் கொண்டு வாசல்லை நி-ப்பீங்கள்' வார்த்தைகளில் நெருப்புத் துண்டங்களைப் பற்ற வைத்து எத்தனை நாள் எரித்திருப்பாள் அம்மாவின் மனதை. மன தில் அன்பிருந்தாலும், போய் பார்ப்பதும் கதைப்பதும் குறைவு. ஆனால் பகீரதியும் பாவம்தான்.



ரஞ்ஜனி சுப்ரமணியம்
(இலங்கை)

அவளுடைய பத்தாவது வயதில் இருந்து, நாற்பது வருசமாக கேட்டுக் கேட்டு அலுத்த குரல். 'அம்மாவுக்கு என்னதான் தீராத வருத்தம்' என்று சிறுமியாக இருந்த போது முதலில் பயந்து மன-தால் உருகி, பின் ஆண்டுகள் உருண்டோட அலுத்து சலித்து மரத்துப் போன குரல் அல்லவா இது.

ஒரு வருடத்துக்கு முன் வரை அந்தக் குரல் மனதில் எந்தப் பரிதாப உணர்வையும் தரவில்லை. ஆனால் இன்று , அம்மா இல்லாத அந்த வெறும் அறை இத்தனை வலிக்கிறதே.

அதன் பின் நிதமும் தொடரும் சுய பச்சாதாபம் கலந்த குற்ற உணர்வை பகீரதியால் இன்றுவரை வெல்ல முடியவில்லை. ஆனாலும் கூட, தன் பக்கமும் நியாயம் இருப்பதாகவே அவளுக்குத் தோன்றும்.

இந்த மாதிரி மனம் கலங்கும் நேரமெல்லாம் கீதோபதேசம் போல அண்ணனின் குரல் ஒலிக்கும்.

'எதெது எந்தெந்த நேரம் உன்னால் இயலுகிறதோ அததை அந்தந்த நேரம் செய். இயலாததை வசதியில்லாததை செய்ய முடியுமா? பின் அதை நினைத்து ஒரு போதும் வருத்தப்படாதே. அம்மாவை என்னோட வச்சுப் பாக்க எனக்கும் வசதியில்லை. இதுவும் எங்கட சீவியம்தான் '.

பின்னே இப்போ எதை நினைத்து அவள் வருத்தப்படுகிறாள். அம்மாவின் இறுதி நொடிகளை எண்ணி. நல்லவேளை அவசரமாக அவளைக் காரில் ஏற்றும் போது இரு கால்களையும் தூக்கி வைக்க வேண்டி இருந்தது. பாவமன்னிப்பு தந்திருப்பாள். நிச்சயமாக. தாய்மனது.

அம்மா நன்றாக சமைப்பாள். அழகி. தையற்கலை முதல் பல திறமைகள் அவளிடம் இருந்தன. எல்லாவற்றிலும் ஒரு நேர்த்தி இருக்கும். ஆனால் எல்லாமே அம்மாவின் முப்பத்தைந்து வயதுவரை தான். அதன் பின்னான அவளது மனச்சோர்வுக்கு ஆயிரமாயிரம் நியாயமான காரணங்கள் உண்டு.


எந்த வைத்தியரிலும் நம்பிக்கை இல்லை. எந்த மருந்தையும் ஒழுங்காக எடுப்பதில்லை. எந்த நேரமும் கட்டிலிலே சாய்ந்தபடி. தினம்தினம் அம்மாவின் கண்ணீர் திரண்ட விழிகளையும் சோகம் ததும்பும் முகத்தினையும், ஒழுங்காக வாராத தலை முடியையும் பார்த்துப் பார்த்து பகீரதி ஏங்கி த்தான் போனாள்.

இந்த வருத்தம் எப்போ மாறும்? எப்போ அனுங்காமல் இருப்பாள், எப்போ மலர்ந்து சிரிப்பாள், எப்போ அம்மா ஒழுங்காக சமைத்து வயிறார சாப்பாடு தருவாள் என்ற நினைவுடன் தான் பள்ளிக்கூட நாட்களும் கழிந்தன. அம்மம்மா வந்து வீட்டில் நிற்கும் ஓரிரு நாட்களில் ருசியான சோறு கறி,

26 ஆம் பக்கம் பார்க்க...








வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாள குல 30 வயது பெண்ணிற்கு ஏற்ற பட்டதாரி மணமகனை தற்போதைய பாடசாலையிலேயே கற்பிக்க கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கும் பெற்றோர்.
தொடர்புகளுக்கு: 4915774318528

யேர்மனியில் Wirtschaftsingenieurin ஆக படிப்பை நிறைவு செய்த 35 வயது நற்குணமுள்ள சைவ வேளாள பெண்ணிற்கு பொருத்தமான பட்டதாரி மணமகனை யேர்மனியில் எதிர் பார்க்கும் பெற்றோர்
தொடர்புகளுக்கு: 4915774318528

MOBIL: 0091-9841026997| Email: kbr0452@yhoo.co.in

# எதிர்காலத்தில் இனவிருத்திக்கும் உறவுகொள்ளாரோ?

இனவிருத்தி என்பதற்கு உடலுறவுதான் முக்கிய காரணமாகின்றது.திருமணம் என்றால் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் என்பது இன்றுவரை தொடர்கின்ற நடைமுறைதான். இதில் ஆணை ஆண் திருமணம் செய்வதோ,பெண்ணைப் பெண் திருமணம் செய்வதையோ இக்கட்டுரை விபரிக்கவில்லை.



இனவிருத்திக்கு ஒரு ஆணும் பெண்ணும் தேவைப்படுவதும் அதற்கு திருமணம் செய்துதான் இனவிருத்தியை தொடரலாம் என்பதும் ஒரு விவாதத்திற்கு பொருத்தமாக இருக்கலாம்.ஆனால் திருமணம் என்ற ஒரு பந்தக் கட்டுப்பாட்டில் ஈடுபடாமலே ஆணம் பெண்ணும் சேர்ந்து வாழ்தலும் அதனால் இனவிருத்தி இடம்பெறுவதும் மனித சமூகத்தில் இடம்பெற்றுக் கொண்டுதானிருக்கின்றது. பூமியில் மனிதர்கள் தோன்றிய தன் ஆரம்பம் எது என்பது எந்தவொரு ஆய்வாளராலும் திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை.

டார்வின் விதி,ஆதாம் ஏவாள் மத நம்பிக்கை இவற்றுக்கு புறம்பாக வேற்றக்கிரகத்தில் வாழுகின்ற மனிதர்களைப் போன்ற உருவ ஒற்றுமை கொண்ட வேற்றுக்கிரக வாசிகளால் அங்கிருந்து பூமிக்கு கொண்டுவந்து விடப்பட்டவர்களே மனிதர்கள் என்பதும்,நிற வித்தியாசங்களைக் கொண்டவர்கள் வேற்றுக்கிரகங்களில் இருக்கிறார்கள் அவர்களின் பரம்பரையினரே பூமியில் வாழ்பவர்கள் என்பதும் பூமி மனிதர்களும் அம்மனிதர்கள் உருவாக்கிவரும் பல்வேறு வளர்ச்சிகளும்,எவ்வாறு ஒரு நாடு தனது நிலப்பரபப்பில் புதிய நவீன பட்டினங்களை உருவாக்குகின்றதோ அது போன்றுதான் வேற்றுக்கிரக வாசிகள் பூமியில் மனிதர்களை அனுப்பிவைத்து பூமியை ஒரு மொடல் கிரகமாக உருவாக்கி வருகிறார்கள் என்ற கருத்தும் பலமான நம்பிக்கையாக வளர்ந்து வருகின்றது.



**ஏலையா**
**க.முருகதாசன்**
**(யேர்மனி)**

அவ்வாறாயின் மனிதர்களில் ஆரம்ப ஆண் பெண் நிலையில் தமக்குள் ஈர்ப்புக் கொண்டு சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை என்பது போல உடலுறவு கொண்டு அதன் பெறுபேறாக பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள் என்பதும்,உடலுறவால் தான் தன்னோடு உடலுறவு கொண்ட பெண்ணின் வயிறு நாளாக நாளாகப் பெருத்து இறுதியில் அவள் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள் என்பதும் அப்போது வாழ்ந்த மனிதன் அதையெல்லாம் தன்னுணர்வால் எவ்வாறு பிரதிபலித்து நின்றான் என்பதையும்கூட எந்தவொரு பிறப்பியல் உடலியல் கோட்பாட்டாளர்களாலும்தெட்டத் தெளிவாகச் சொல்ல முடியவில்லை.

ஒரு காலகட்டம் வரையும் பெண் ஆண் என்ற பேதம் மட்டுமே இருந்தது எனிலும் மோசமாக உறவுமுறை மீறல்கள் இருந்ததில்லை என்றும் முடிவெடுக்கலாம். ஒரு ஆண் ஒரு பெண்ணைத் தேர்வு செய்தும் ஒரு பெண் ஒரு ஆணைத் தேர்வு செய்தும் வாழும் வாழ்க்கை பின்னர் திருமணமுறையாக பரிமாணம் பெற்றது. ஒரு ஆணுக்குப் ஒரு பெண் தேவையென்பதில் உடலுறவைத் தவிர்த்து விட்டுப் பார்க்கலாம் என்பது சமாளிப்பே தவிர அது உண்மையல்ல.

உடலுறவு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் மகிழ்ச்சியைத்தரும் பொழுதாக விருப்பதால்தான் அதில் ஈடுபடுகிறார்கள் என்பதை நிராகரிக்க முடியாது.அதுவே இனவிருத்திக்கான தோற்றுவாயாகவும் இருக்கின்றது. உடலுறவு கொள்ளலில் ஆண் பெண் இருவரினதும் உடல் மகிழ்ச்சியடையாத போது அவர்களிருவரும் காம எழுச்சியுடன் உடலுறவில் ஈடுபடமாட்டார்கள்.

தமக்கு ஒரு பிள்ளை வேண்டுமென்பதற்காக உடலுக்கு மகிழ்ச்சிதராத உறவில் ஈடுபடு வார்களே தவிர விரும்பி அல்ல. குழந்தை பெற்றுக் கொள்ள இயலா தவர்கள் வேறொரு ஆணின் விந்தணுவுயிரை மருத்துவர்களின் உதவியுடன் தமது கருப்பையில் வளர்ப்பதும்,தனது கருப்பை பலவீனமானது என்பதை அறிந்து தனது கணவனின் விந்தணுவுயிரை வாடகைத் தாய் மூலம் வளர்ப்பதும் இன்று சர்வசாதரணமாக இடம்பெற்று வருகின்றது.

மனித உடலில் பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றது.உணவுப் பழக்கவழக்கங்கள்,மருந்துப் பாவனைகள் போன்றவற்றால் வேதியல் மூலகங்களால் ஏற்படும் உடலுறுப்புகளின் செயல்பாடுகள் மாற்றமடைந்து வருகின்றன.

இதன் பயனாக உடலுறவு மூலம் அணும் பெண்ணும் பெறும் இன்பம் மெல்ல மெல்ல அற்றுப் போய்,காம உணர்ச்சியற்ற கடமைக்கு உறவு கொள்ளும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதை அறுதியிட்டுக் கூறலாம். ■

---

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ‘ஆசைமுகம் மறந்து...’

கத்தரிக்காய் பொரியலுடன் இடியப்ப பிரட்டல், முட்டைச்சொதி, புட்டும் முருங்கைகாய் பிரட்டல் கறியும் கட்டாயம் கிடைக்கும். பள்ளிக்கூடம் கொண்டு போக அவளது கனவுப் பார்சலும் கிடைக்கும். அடுத்து அந்த நாட்கள் வருவதை வர்ணக் கனவாகக் கண்டபடி, உப்புச்சப்பில்லாத கான்டீன் சாப்பாட்டுடன் காலமும் கழிந்தது.

நண்பி வதனியின் பார்சல் சோற்றில் பங்கு கிடைக்கும் சில ருசியான நாட்கள் அவளுக்கு அற்புதமாகத் தெரிந்தன.

இன்று பகீரதி அருமையாக சமைக்கிறாள் என்றால் அது அம்மாவால்தான். சொல்லித் தந்து பழக்குவது ஒருவகை. இன்னொருவர் செய்யும் போது பார்த்துப் பழகுவது ஒரு கலை. செய்யாமல் ஏங்க வைத்து தானாக பழக வைப்பது இன்னொரு வகை. காலத்துக்குக் காலம் அம்மா ஒவ்வொரு ரகமாக இருந்தாள்.

அம்மா அன்பானவள்தான். தனக்கென ஆடம்பரங்கள் எதுவும் வேண்டாதவள். அற்புதமான பெண்ணாக இருந்திருக்க வேண்டிய அவளுக்கு மனநோயைத் தந்தது இயற்கையின் குற்றம்.

இப்படியாக, அம்மாவின் எழுபத்தைந்தாவது பிறந்த நாளன்று நிஜமாகவே திடீரென புலிவந்தது. அன்று நடந்தது, இன்று நினைத்தாலும் ஆவி துடிக்குது.

‘அக்கா, பார்சலை கொண்டு போய் டியூசன் கிளாசிலை குடுக்கட்டா ‘

சுமித்திராவின் குரல் நிஜத்திற்குக் இழுத்துக் கொண்டு வந்தது . பாடசாலை முடிந்து நேரே டியூஷன் வரும் ஐம்பது மாணவிகளுக்கான மதிய உணவுப் பொதிகளை சுமித்திரா ஆட்டோவில் கவனமாக ஏற்றினாள்.

இது பகீரதியின் இளவயது ஏக்கங்களுக்கான இன்றைய வடிகால் மட்டுமல்ல. தினசரி வருமானத்திற்கான கௌரவமான வழயும் கூட. ஆனால் இன்று மட்டும் கட்டணம் இல்லை. அம்மாவின் பிறந்தநாள். மிகுதி ஒற்றைப் பார்சல் மேசையில். அழகான புன்னகையுடன் கம்பீரமாக வீற்றிருந்தது. பகீரதி கைகளைக் கழுவிக் கொண்டு மேசையில் வந்து அமர்ந்தாள்.

உணவுப் பொதியை கையில் எடுத்து ஆசையுடன் தடவிக் கொடுத்தாள். நினைவுக் கடலில் நீந்தியபடி , மூடியைத் திறந்து ரசித்து ரசித்து உண்ணத் தொடங்கினாள். ■





அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# யேர்மனியில் கற்காலத்தில் ஆரம்பித்த அச்சகம் ஒன்று வெற்றிமணி விருதுக்கும் ஒரு காரணமானது!



Stone print 1852

என்ன கற்காலம். கற்காலத்தில் அச்சகமா என்று எண்ணுவது புரிகிறது. யேர்மனியில் ஐந்து தலைமுறையாக அச்சுத்தொழிலில் தடம் பதித்த ஒரு நிறுவனம். Seltmann Print. இற்றைக்கு 172 வருடங்களுக்கு முன் கல்லில் உருவங்கள், எழுத்துக்கள் பொறித்து அதனை postcard அளவில் அச்சு பதித்து வெளியிட்டனர். ஆதனை Stone print என்று சொல்வார்.

அதனாலேயே கற்காலம் என்று முதல் குறிப்பிட்டேன். (Stone printing shop for picture postcards) இத் தொழிலைத் அவர்கள் ஆரம்பித்த இடம், Erzgebirge/ Saxony. என்ற நகரம். இது யேர்மனி யின் தென் கிழக்கு பக்கம் அமைந்த ஒரு கிராமம்.

இந்த கல் அச்சு பதிப்பின் ஸ்தாபகராக இருந்தவர் (Founded here the master stone printer Karl Hermann Seltmann (1852-1914)

இந்த அச்சகம்.1884 அவரது மகன் அர்னோ செல்ட்மேன் (1884-1958) ஒரு வெற்றிகரமான அச்சு தொழில் நுட்ப பயிற்சி பெற்ற பின்பு அச்சுப் பொறிமுறை மேலும் சிறப்பாகப்பயணித்தது.

ஆர்னோ (Arno 1912) தனது பணிவிடத்தை Lüdenscheid/Sauerland.க்கு மாற்றினார். அன்று முதல் அவர் குடும்பம் தலைமுறை தலை முறையாக Lüdenscheid வாழ்ந்தனர்.இந்த நகரத்தில் 40 வருடங்கள் நானும் வசித்துள்ளேன்.



1884



1912



1985



2012

அவர் பிள்ளைகள்.
மகன்கள்
வெர்னர் செல்ட்மேன் (1915-1986)
ஹெகார்ட் செல்ட்மேன் (1919-1996)
ஹார்ட்விக் செல்ட்மேன் (1928-2015)
1985 ஆம் ஆண்டு முதல் 1947 ஆம் ஆண்டு பிறந்த ஃபிராங்க் செல்ட்மேன், 1985 ஆம் ஆண்டு தனது தந்தை கெர்ஹார்ட் செல்ட்மேனிடமிருந்து லித்தோகிராஃபிக் பிரிண்டிங் அச்சகத்தை எடுத்துக் கொண்டார். இது 1946 இல் ஆர்னோ செல்ட்மேன் நிறுவிய எம். செல்ட்மேன் நிறுவனத்திலிருந்து 1965 இல் உருவானது.



தந்தையும் மகனும்



வெற்றிமணி விழாவில் யேர்மனிய அச்சகத்தின் அதிபர்களுடன் 2008


ஆர்னோ செல்ட்மேன் (பிறப்பு 1972) செல்ட்மேன் GmbH அச்சிடும் நிறுவனத்தின் நிர்வாகத்தை தனது தந்தை ஃபிராங்கிடமிருந்து 2012 ம் ஆண்டு எடுத்துக்கொள்கிறார். Seltmann Printart என்ற முத்திரை பதித்த நிறுவனமாக அது இயங்கி வருகிறது.

ஒரு யேர்மனியரின் அச்சகத்தில் இருந்து பிறக்கும் வெற்றிமணி பத்திரிகை கடந்த மாதம் இங்கிலாந்தில் ஐரோப்பாவில் நீண்டகாலம் வெளிவரும் அச்சு ஊடககளுக்கான விருதினை பெற்றது. அதன் நேர்த்தியான அச்சுப்பதிப்பு, 30 வருடங்கள் கடந்தும் அதன் தொடர்ச்சியான வரவு, இவை யாவும் இந்த உயர் விருதுக்கு காரணியாகிறது. தொடர்ச்சியான வரவிற்கு வாசகர்கள், படைப்பாளிகள், விளம்பர அனுசரனையாளர்கள் இவர்களது பங்களிப்பும் உயிர் நாடி போன்றது.

இந்த நேரத்தில் 2025 ஆண்டு தை மாதம் வெற்றிமணி தாயகத்தில் ஆரம்பித்து 75 வருடங்கள் நிறைவு பெறுகிறது. அன்று 1950 ஆண்டு நாலப்பிட்டியில் வெற்றிமணி மாணவர் சஞ்சிகையாக ஆரம்பித்த அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் சேவையைப் போற்றி அவரை நினைவு கொள்வோம்.



72 வருடங்களுக்கு பின் வெற்றிமணி அச்சுப்பதிவு செய்த அச்சகம்



வெற்றிமணி மு.க.சுப்பிரமணியம்

2022ஆண்டுநாவலப்பிட்டிசென்றபோது 72 வருடங்களுக்கு முன் வெற்றிமணி அச்சுப்பதிவு செய்த அச்சகத்திற்கு சென்று (மில்ட்டன் அச்சகம்) பார்வையிட்டேன்.

தலைமுறை மாறியிருந்தாலும் அச்சகத்திற்கு தேவையான அந்த தலமை இயந்திரம் இன்றும் இருப்பதைக்கண்டு அதிசயித்தேன்.






அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# அறிவுத் தேடலில் ஆபத்தான முட்டுக்கட்டை!



தீபா சீறிதரன்
(தைவான்)

அறிவுத் தேடலில் மிக ஆபத்தான ஒரு முட்டுக்கட்டை நம் அனுபவத்திற்கு வெளியே இருக்கும் வாழ்க்கை முறையை ஏளனம் செய்வதும் அது ஒரு போலித்தனமான வாழ்க்கை என்று முத்திரைக் குத்துவதும். ஞானம் என்பது வெறும் அனுபவத்திலிருந்து வருவதில்லை. அது அனுபவத்தைப் பிரதிபலிப்பதிலருந்து வருகிறது. ஒரு பிரச்சினையை/ செயலை/ இலக்கை அணுகும் முறை மனிதர்க்கு மனிதர் வேறுபட்டிருக்கலாம். அதனால் அதை அவர்கள் பிரதிபலிக்கும் விதமும் வேறுபட்டுத்தான் இருக்கும். ஒருவரின் வாழ்வாதாரம், அவரின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியடைந்திருக்கும் அளவு, கலாச்சாரம், சமூகச் சூழல், போன்ற புறக் காரணிகளும் இதில் பெரும்பங்கு வகிக்கின்றன. உண்மையான நுண்ணறிவைக் கண்டடைவதும் அது பற்றிய புரிதலைப் பெறுவதும் நாம் வாழ்ந்த ஆண்டுகளின் எண்ணிக்கையைப் பொருத்தோ, வெறும் பார்வையாளராக இருந்துகொண்டு நாம் கேட்டறிந்த அனுபவங்களைப் பொருத்தோ அல்ல. அது, நாம் ஒவ்வொருவருடைய வெளிப்பாட்டிலிருந்தும் கற்றுக்கொண்ட பாடங்களைப் பற்றியது. அதற்கான ஒரே வழி எந்தவித முன் தீர்மானங்களும் இல்லாமல் ஒரு வாழ்வை ஆத்மார்த்தமாக, ஆர்வத்தோடு உற்று நோக்குவது மட்டுமே.

---

## 23 ஆம் பக்கத் தொடர்ச்சி... மிருகங்களா குழந்தைகளை....

பாதிரியாருக்கு இந்தியாவிலே நாதி அற்ற குழந்தைகளை வளர்க்கப் பணம் தேவையாக இருந்திருக்கும், அதற்காக இப்படி ஒரு கதையை சோடித்து படங்களை எடுத்து, மேற்கு நாட்டு பத்திரிகைகளிலே பிரசுரித்தமையால் அவருக்கு குழந்தைகளை வளர்க்கப் பணம் கிடைத்திருக்கும் என விமர்சித்தார்கள். ஆனால் இந்தியாவிலே குழந்தைகள் ஓநாயால் வளர்க்கப்பட்டதாகவும் அதை கிராமவாசிகள் கண்டெடுத்ததாகவும், பத்திரிகையில் செய்தியாக வாசித்துள்ளேன். மேற்கத்திய ஆய்வாளர்களுக்கு அப்பாற்பட்ட விஷயமாக இது இருக்கலாம்.

ஆனால் இந்தியப் பெருங்கண்டத்தில் இவை நிஜமாகவே நடந்த நிகழ்வுகள் தான். மனிதாபிமானம், மனிதம், இரக்கம் தாய்மை என மனிதரான நாம் பலவாறு பேசுகிறோம். அத்தனைக்கும் அப்பால் தன்மானம், சமூகத்தின் முன், அவமானம் என்பதற்காக, பெற்றக் குழந்தையை அனாதரவாக விடத் துணிகிறது மனித சமூகம். இது எதுவுமே அறியாத மிருகங்களிடம் காணும் அன்பு கூட அற்றவர்தான் மனிதரா? இனிமேலாவது ஒரு பெண் திருமண பந்தத்தில் ஈடுபடாது குழந்தையைப் பெற்றுவிட்டால், மற்றவர் போல குழந்தையும் தாயும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டால் இந்த கொடுமை நடைபெறாது.

மேற்கு நாடுகள் இன்று இதை சகஜமாக அங்கீகரிக்கின்றன. ஆனால் எமது சொந்த நாடுகளிலும் இந்த நிலைமை வரவேண்டும்.

---

## 24 ஆம் பக்கத் தொடர்ச்சி... ஒவ்வொருவரது புன்னகைக்கும் பின்னால்

சமையல்,வாசித்தல்,நடனம்,பயணம்,தோட்டம், விளையாட்டு என எதுவெல்லாம் உங்களைத் தேற்றுமோ அதையெல்லாம் செய்து உங்கள் உள்ளத்தைத் தெம்பாக்குங்கள்.

★ இழப்புகளைக் குறித்து வருந்தும்போதெல்லாம் அதையும்தாண்டி நீங்கள் வாழ்ந்து கொண்டிருப்பதற்கான காரணங்களைக் கொண்டாடுங்கள்.

உங்கள் வாழ்வில் நிம்மதி வேண்டுமானால் உங்களை இறுகப் பிடித்திருக்கும் துயர நினைவுகளை அப்படியே புதைத்துவிட்டு உங்களுக்கான வாழ்வை வாழத் தொடங்குங்கள். நிகழ்காலத்தின் நல்ல தருணங்களை அனுபவிக்கப் பழகுங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே. உங்கள் உள்ளம்தான் உங்களுக்கான சாத்தானும், தேவதையும் என்பதை உணர்ந்துகொண்டால் தீயவற்றை விரட்டிவிட்டு நல்லனவற்றைக் கொண்டாடுவீர்கள்.

உளமெனும் குரங்கு தீயவற்றை எண்ணித் தாவும்போதெல்லாம் உங்கள் தன்னம் பிக்கை கொண்டு அதைக் கட்டிப்போட்டுவிடுங்கள். உங்கள் உள்ளத்தின் தேவதையை உணர்ந்துகொள்ளத் தொடங்கும்போதுதான் உங்களுக்கான மாற்றம் பிறக்கும்.

---

## 10 ஆம் பக்கத் தொடர்ச்சி... இரவில் படுக்கப்போகும் போது

அதைத் தவிர்க்க ஒன்றிலிருந்து ஆயிரம்வரை எண்ணுவேன் தூக்கம் வந்து உறங்கி விடுவேன். முக்கியமான ஒன்று, காலையில் ஐந்து ஆறு மணிக்கு முன் படுக்கையைவிட்டு எழுந்துவிடுவேன்.

அதனால் இரவில் தூக்கம் கேள்வி கேட்காமலே வந்துவிடும். சமையல் அறையில் அஞ்சறைப் பெட்டியில் உள்ள பதார்த்தங்களை நாளுக்கு ஒவ்வொன்றாக அவித்துக் குடிப்பேன்.

ஆனால் ஒன்றே ஒன்றை எண்ணத் தொடங்கிவிட்டேன், எல்லோருக்கும் பிறக்கும் போதே இறப்பும் எழுதப் பட்ட ஒன்றாகும். அது நடக்கும் நேரம் நடந்தே தீரும். எப்பொழுது வருகிறதோ வரும்போது அது வரட்டும் என்ற எண்ணமும், வயோதிபத்தின் மரணப்பயத்தை முழுமையாக போக்கிவிடும் என்பதும் உண்மையிலும் உண்மையாகும்.

இது என் கருத்தேயாகும்.சிலர் எண்ணலாம் எங்களுக்கு அப்படியான பயங்கள் வருவ-தில்லை என. அப்படி இருப்பீர்கள் என்றால் புண்ணியம் செய்தவர்கள் நீங்கள். ஒருசிலர் மனோபலம் கொண்டவர்கள் அவர்களுக்கும் இந்தப் பயம் கிட்டவே நெருங்காது. யாருக்காக எழுதப்பட்டதோ இக்கட்டுரை, அவர்கள் எல்லோரும் கூடுவோம் பாடுவோம் கொண்டாடுவோம் வாங்கோ.

---

## 21 ஆம் பக்கத் தொடர்ச்சி... 16 வயதுக்கு மேற்பட்டோர்...

இப்ப வீட்டில விதம்விதமாச் சமைக்கிறேன். விட்டுப்போட்டு ஒழுங்காப் படி. மானத்தைக் காப்பாற்றும் வழியைப் பார் என்று ஒரு அம்மா சொல்கின்றார். தன்னால் முன்னேற முடியவில்லை என்பதற்காக மகளாலும் முடியாது என்று ஒரு தாய் எப்படி நினைக்க முடியும். முன்னேற்றம் என்பது அவரவர் துறைகளைப் பொறுத்தது. கல்வியறிவில்லாத ஒருவர் தொழிலதிபதியாக வரவில்லையா? பல்கலைக் கழகம் செல்லாத எத்தனையோ பேர் வெளிநாடு வந்து பட்டப்படிப்பு கற்கவில்லையா? காலச்சு1Oழல் வயதுக்கோளாறு தள்ளிப்போட்ட கல்வி காலம் தாழ்த்தி வரவில்லையா?

எங்கள் பிள்ளைகளுக்கு அறிவு போதாது. கல்வியைத் தீர்மானிக் கும் பக்குவம் அவர்களுக்கு இல்லை. என்னும் அறியாமையில் நமது பெற்றோர் வாழுகின்றார்கள். எம்மை அறியாமலே எமது தோளைத் தாண்டி வளர்வது போல் எம்மை அறியாமலே அவர்களுக்கு அறிவு வளர்ச்சியும் உடல் வளர்ச்சியுடன் ஏற்படுகின்றது.

சந்ததி இடைவெளி தரம் கூடிய சமுதாயத்தை உருவாக்குவதை கற்கால மனிதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எமக்குப் புரியவில்லையா? இதைவிட ஆசிரியர் மையக்கல்வியில் கல்வி பயின்று வந்த நாம் மாணவர் மையக்கல்வியில் கல்வி பயிலும் எமது இளவயதினருக்கு ஆலோசனை கூறுவது எந்த விதத்தில் பொருந்தும். இளையோருக்குத் தாமே ஒரு துறையைத் தெரிவு செய்யும்படிப் பாடசாலையிலேயே அவர்களுக்குச் சலுகை வழங்கப்படுகின்றது வழிப்படுத்தப்படுகின்றது. அவர்கள் எந்தத் தொழிலைத் தெரிவு செய்தாலும் அதில் முன்னேறவும் எந்தத் தொழிலாய் இருந்தாலும் மனிதாபிமானத்துடன் மதிப்புக் கொடுக்கவும் இந்த நாட்டில் பண்பு இருக்கின்றது. அத்துடன் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறியதும் அல்லது தமது படிப்பை முடித்ததும் தொழில்வாய்ப்புக் கிடைக்கக் கூடிய துறையைத் தான் இளையோர் நாடுவர். அந்தத் துறை பற்றிய பூரண அறிவைப் பெறுவதற்காக கணனி நூல்கள் என நுழைந்து அலசி ஆராய்வார்கள். அதற்குரிய வாய்ப்பும் அவர்களுக்கு இருக்கின்றது. எனவே நமது சிறுவர்களுக்கு எதுவும் தெரியாது. என்ற எண்ணத்தைப் பெற்றோர் கைவிடவேண்டியது அவசியம். இளையோர் ஆர்வமுள்ள கல்விக்கு ஊக்கம் கொடுப்பவர்கள் தான் சிறப்பான பெற்றோர்கள். இளையோர் தமக்குத் தகுந்த துறையைத் தாமே தெரிவு செய்ய பெற்றோர்கள் ஒத்துழைக்கும் போது பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு மொடல் பெற்றோராவார்கள். பிள்ளைகளும் படிப்பில் முன்னேற்றம் காண்பார்கள்.







# சிற்பங்கள் கூடி அளவளாவும் கழுகுமலை..!





மதுரை ஆர்.கணேசன்


தமிழகத்தில் எண்ணிலடங்கா திருக்கோயில்கள் இருந்தாலும் கற்பனைகளில் பொங்கி வழியும் ஒரு சிற்பக் கோயில் என்று வர்ணிக்கப்படுகிற "..கழுகுமலை வெட்டுவான் கோவில்.." பற்றி சொல்லும் போதே வியப்பும் பீறிடுகிறது..!

"..தென்னகத்தின் எல்லோரா.." என்று அழைக்கப்படுகிற இக்குடவரைக்கோயில் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டிக்கும் சங்கரன்கோவிலுக்கும் இடைப்பட்ட சாலையில் அமைந்திருக்கிறது.

"..இராமாயணக் காலத்தில் சம்பாதி என்ற கழுகு வடிவம் பெற்ற முனிவர் சாபவிமோசனத்திற்காக இங்குள்ள ஆம்பல் குளத்தில் நீராடி முருகப்பெரு மானை வழிபட்டு தன்னுடைய சாபவிமோசனம் நீங்கியதால் "..கழுகுமலை.." என்ற பெயர் பெற்றதாக தலபுராணம் கூறுகிறது. கழுகுப்பார்வையில் பார்த்தால் புரியும் சுமார் 300 அடி உயரம் கொண்ட

இம்மலை தன்னுடைய உடம்பிலிருந்து "..ப.."வடிவில் சதைப்பகுதியை பிய் த்து தானம் கொடுத்தது போல தெரிகிறது அங்கு 47 அடி நீளத்திலும் 40 அடி சதுர உயரத்திலும் மேலிருந்து கீழாக குடைந்து சிற்பக் கோயிலை உரு வாக்கியிருக்கிறார்கள். மலை ஏறும் போதே இடது பக்கம் கீழே ஆம்பல் ஊரணியும், பக்கத்திலேயே கோயிலும் அதனருகே ஒரு பாழடைந்த மண்டபம் பார்த்துக் கொண்டே கவனமாக சென்றால் "..வெட்டுவான் கோயிலை.." அடையலாம். அதேபோல வலது பக்கம் மலை உச்சியில் அய்யானார் கோயிலுக்கும் செல்லலாம் அங்கு ஸ்ரீசென்னம்மாள், ஸ்ரீ வனப்பேச்சிம்மன், ஸ்ரீமுத்து வீரப்பன் சாமி, ஸ்ரீகருப்பசாமி, ஸ்ரீமதுரைவீரனுக்கும் தனித்தனி சன்ன திகள் அமைக் கப்பட்டிருக்கிறது.

இதையொட்டி சமணர் பள்ளி மற்றும் சமணர்கள் தங்கி இருந்த சிறிய குகையும் இருக்கிறது சமண தீர்த்தங்கரர்களான வர்த்தமானர் உள்பட இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் உள்பட சமணர்களின் தாய் தந்தை



குரு சீடர்களுக்கும் எண்ணற்ற சிற்பங்கள் மற்றும் சிற்பங்களை வடித்துள்ளவர்களின் பெயர்கள் வெளிப்புறப் பாறையில் வட்ட எழுத்துக்களாக பொறிக்கப்பட் டுள்ளது.

8 ஆம் நூற்றாண்டில் பராந்தக நெடுஞ் சடையன் என்ற பாண்டிய மன்னனால்கழுகுமலைவெட்டுவான் கோயில் தோற்றுவிக்கப்பட்டது என்றாலும் ஏனோ இக்கோயில் முழுமை பெறாமல் பாதியிலேயே கைவிடப்பட்டதாக சொல்லப்படுகிறது..? கருவறையில் மூலவ ராக சிவ பெருமானை பிரதிஷ்டை செய் திருக்க வேண்டும் ? ஆனால் தற்போது விநாயகர் சிலை மட்டும் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். இக்கோயில் வடகிழக்கு திசையை நோக்கி அமைக்கப்பட்டிருக்கிறது கருவறை, அர்த்த மண்டபம் இதற்கு மேலே இரண்டு நிலை கொண்ட விமான அமைப்பின் மேலே தாமரை போன்று இதழ்கள் விரிந்த பகுதியில் கலசம் மட்டும் இல்லை..?

தெற்கு பகுதியில் தட்சினாமூர்த்தி மிருதங்கம் வாசிப்பது போன்ற சிற்பம் முதன் முதலாக இங்குதான் வடிக்கப்பட்டுள்ளது..! மேலும் கிழக்கில் சிவன், மேற்கில் திருமால், வடக்கில் பிரம்மன், மற்றும் ஒருபக்க பாறையில் தனித்து குறவன், குறத்தி



போன்ற தோற்றத்தில் சிற்பங்கள் பார்க்கும் போது ரசனைக்கும் சிந்தனைக்கும் சவால் விடுகின்றன..!

முருகப்பெருமான் அணிகலன்களுடன் கூடிய காட்சியில் தன்னுடைய இடது தொடை பக்கத்தில் கைவைத்துக் கொண்டவாறு நான்கு கரங்களுடன் காட்சி தருகிறார். இரண்டடுக்கு விமானங்களில் உள்ள நான்கு மூலைகளிலும் நந்தி சிற்பங்கள் இவற்றுக்கு கீழே யாளி வரிகள் கபோதகம் மற்றும் குரங்கு மற்றும் சிங்கம் தவிர ஓர் இடத்தில் பூதக்கணங்களின் குறும்புத்தனங்களையும் வரி சையாக பார்க்க முடிகிறது. கழுகுமலை வெட்டுவான் கோயில் சிற்பங்களை எட்டி, எனாதி,காவிதி போன்ற மெச்சிய பட்டங்கள் பெற்ற சிற்பிகளே வடித்துள்ளதாக தெரியவருகிறது..?!

உங்களது வாழ்வில் ஒரு முறை யாவது "..கழுகு மலை வெட்டுவான் சிற்பக் கோயிலை பார்த்து ரசி த்து வியப்படைந்து மனம் பூரித்தால்.." அதுவே இந் த சிற் பக்கோயிலை செது க்கிய சிற்பிகளுக்கு செலுத்தும் பெரும் கௌர வமாகும்..!!!

எப்படி செல்லலாம் ? மதுரையிலிருந்து கோவில்பட்டி 95 கி / மீ கோவில் பட்டியி லிருந்து கழுகு மலை 22 கி / மீ தூரத்தில் அமைந் துள்ளது.

வெட்டுவான் கோயில் காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை தரிசனம் செய்ய முடியும்.





# 500 ஆண்டுகள் பழமைவாய்ந்த மணியில், தமிழ் எழுத்துகள்!!!

B.H.அப்துல்ஹமீத்

தமிழகத்தின் தொன்மைத் துறைமுகமாம் நாகப்பட்டினத்திற்கும் நியூஸிலாந்துக்கும் என்ன உறவு?

New Zeeland தகவல் பொருள் அருங்காட்சியகத்தில் பேணிப் பாதுகாக்கப் பட்டுவரும்,500 ஆண்டுகள் பழமை வாய்ந்த அந்த மணியில், தமிழ் எழுத்துகள்!!!

அதனை கைகளால் தொட்டுத் தூக்கிப் பார்க்க, எமக்கு மட்டும் சிறப்பு அனுமதி வழங்கப்பட்டது, அதுவும் கையுறை அணிந்துகொண்டு. இந்த மணியின் வயது?– 15ம் நூற்றுண்டுக்கும் 18ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம் என ஆய்வாளர்கள் கணித்துள்ளார்கள். நாகப்பட்டினத்தில் இருந்து புறப்பட்ட ஒரு பாய்மரக் கப்பல் புயலில் சிக்குண்டு அக்கப்பலின் சிதிலங்கள் கரையொதுங்கிய போது, ஒரு மரத்தின் வேர்களுக்குள் சிக்குண்டிருந்த இந்த வெண்கலமணியைக் கண்டெடுத்த நியுஸிலாந்தின் ஆதிக்குடிகளான, 'மௌரி' இனத்து மக்கள், இது என்னவென்று தெரியமால், உணவு தயாரிக்க, இதனடியில் நெருப்பு மூட்டி உருளைக் கிழங்குகளை அவிப்பதற்குப் பயன்படுத்தி வந்தார்களாம். நீண்ட காலத்தின் பின்னர் 1899ம் ஆண்டு, இதனைக் கண்டெடுத்த வரலாற்று ஆய்வாளர் திரு. William Colenso, இந்த வரலாற்றுச் சின்னத்தை அருங்காட்சியகத்தில் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

166mm உயரமும், 155mm சுற்றளவும் கொண்ட இந்த மணியில் பொறிக்கப் பட்டிருந்த எழுத்துகள் எந்த மொழிக்குரியவை? எந்த நாடு எனக் கண்டுபிடிப்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியில் இது தமிழ் மொழி என்பதுவும் அந்த நாளில் மிக முக்கிய துறைமுகங்களில் ஒன்றான நாகப்பட்டினத்தில் இருந்து புறப்பட்டுவந்த கப்பலின் மணி என்பதுவும் தெரியவந்துள்ளது.

இந்த மணியில் இப்போதும் தெளிவாகத் தெரியும் வகையில், பொறிக்கப்பட்டுள்ள வரி– ' முகையத் தீன் பாகசுடைய கப்பல் மணி' இஸ்லாமியராயினும் தம் தாய்மொழியாம் தமிழை தமது மொழி அடையாளமாய் மதிக்கும் ஒருவரது கப்பல் எனப்புரிந்தது. வாணிபத்தில் சிறந்து விளங்கிய நம் தொன்மைத் தமிழரின் அடையாளக் குறியீடாக தமிழ் எழுத்துகளைக் கண்ணுற்றபோது பெருமையால் நெஞ்சு நிமிர்ந்தது.







# சிறப்பாக நடைபெற்ற கௌசியின் 'குருவிக்கூடு' நூல் வெளியீடு!



கெளசி என்னும் புனைபெயரில் எழுதி வரும் எழுத்தாளர் சந்திரகௌரி சிவபாலன் அவர்களுடைய குருவிக்கக்கூடு என்னும் நாவல் இலக்கிய நூல் வெளியீடு கடந்த 26.10.24 ம்திகதி சனிக்கிழமை மாலை 2 மணியளவில், தமிழ் பற்றாளர் திரு வி.சபேசன் அவர்களின் ”தமிழர் அரங்கம்” டோட்முண்ட் மண்டபத்தில் நடைபெற்றது.தமிழ்வானவையின் 56வது நிகழ்வாக நடைபெற்ற இந்நிகழ்வில் மண்டபம் நிறைந்த வாசகர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

முதலில் தமிழ்வானவை கீதம் திரையில் ஒலித்தது. அதன்பின் தமிழ்மொழி வாழ்த்தைச் செல்வி. பிரவீணா தயா தனது இனிமையான குரலில் பாடி மகிழ்வித்தார். வரவேற்புரையைப் பொன்.புத்திசிகாமணியாகிய நான் வழங்கி அனைவரையும் அன்போடு வரவேற்றேன்.

நூல் அறிமுகத்தை திருமதி ஜெகதீஸ்வரி மகேந்திரன் வழங்கினார். நூல் வெளியீட்டில் முதல் பிரதியை சிறந்த சமூக செயற்பட்டாளர் திருமதி. வதனி செல்வநாதன் பெற்றுக்கொண்டு சமூகச் செயற்பாடுகளில் அனைவரும் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். திருமதி கௌசி அவர்களின் நூலைப் பெற்றுக் கொண்டதில் பெரு மகிழ்ச்சி கொள்வதாகவும் அனைவரும் இதனை வாங்கி வாசிக்கவேண்டும் என விரும்புவதாகவும் தெரிவித்தார்.இரண்டாவது பிரதியை எம்,ரீ.வி தொலைக்காட்சி நிறுவனர் தமிழ்மணி சிவநேசன் அவர்கள் பெற்றுக்கொண்டார். முனைவர் முனைவர் மு.இளங்கோவன் (தமிழ்ப் பேராசிரியர் பாண்டிச்சேரி) அவர்கள், நூலைப் பற்றிய சிறப்பான விமர்சன உரையை நிகழ்த்தினார். இது ஒளிப்பதிவாக திரையில் காட்டப்பட்டது.

பிரதம விருந்தினராக புகழ்பெற்ற ”வெற்றி மணி” பத்திரிகை ஆசிரியர் திரு மு.க.சு சிவகுமாரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். நூலாசிரியர் திருமதி கௌசி சிவபாலன் அவர்கள் நீண்ட காலம் வெற்றிமணிப் பத்திரிகைக்கு எழுதிக் கொண்டு வருபவர். அவரது எழுத்துகள் வாசகர்களை மிகவும் கவர்ந்து வருகிறது. அவருக்கு எனது பாராட்டுகள். அவர் கட்டிய இக்குருவிக் கூட்டை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பிரதம விருந்தினரின் வாழ்க்கைக் குறிப்பை தொகுப்பாக காணொளி வடிவில் நூலாசிரியர் திரையில் காண்பித்து சிறப்பு செய்திருந்ததுடன் தமிழ் வான் அவை சார்பாக வெற்றிமணி ஆசிரியரைத் தமிழருவி வானொலி இயக்குனர் மாசிலாநயினைவிஜயன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன் சி. சிவபாலன் அவர்கள் அன்பளிப்பும் வழங்கினார். வாசகர்கள், வரிசையில் நின்று நூலைப் பெற்றுக் கொண்டது மகிழ்ச்சியாக இருந்தது.

ETR வானொலி அதிபர் திரு.த.ரவீந்திரன், பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய தலைவரும் எழுத்தாளருமான திரு.வி.சபேசன். பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய உறுப்பினர்களான எழுத்தாளர் ஏலையா முருகதாசன், திரு. சுப்பிரமணியம், ஜெர்மனி தமிழ் எழுத்தாளர் சங்க உப தலைவர் திரு. அம்பலவன் புவனேந்திரன், ஜெர்மனி தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினர்கள் கவிஞர் ராம சம்பந்தன், திருமதி சாந்தினி துரையரங்கன், திரைப்பட இயக்குனர் திருமதி.சிபோ சிவக்குமாரன், அறிவிப்பாளர்.திரு.முல்லைமோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நூலாசிரியர் கௌசி அவர்களுக்கு திருமதி ஜெகதீஸ்வரி மகேந்திரன் கவிதையால் புகழ்ந்து நினைவுப் பரிசொன்றை வழங்கினார். தமிழ் மணி சிவனேசன் அவர்கள் நூலாசிரியருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். ஏற்புரையை நூலாசிரியர் மிகச் சிறப்பாக வழங்கினார். அனைவருக்கும் நன்றியையும் தெரிவிக்க மறக்கவில்லை.

நிகழ்வை நகைச்சுவையோடு தொகுத்து வழங்கிய திருசி.சிவவினோபனுக்கு பாராட்டுடன் பொன்னாடைக் கௌரவமும் கிடைத்தது. இந்நூல் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் அறிமுகம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**பொன். புத்திசிகாமணி, யேர்மனி**





# இராஜ இராஜ சோழன் 1039 சதயவிழாவில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்








ஈழத்தமிழர்களின் பெருமதிப்புக்குரிய செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள், தஞ்சாவூரில் இன்று 10.11.2024 இடம்பெற்ற இராஜ இராஜ சோழன் 1039 சதயவிழாவில் அறு.திருமுருகன் அரசனது சிலைக்கு மாலையணிந்து சிறப்புரையாற்றினார்.ஈழத்தமிழர் சார்பாக கலந்து சிறப்பித்தார் என்பதில், பெருமகிழ்ச்சி அடைகிறோம்.



# சூர்யாவின் ஆசை

நடிகர் சூர்யா அளித்த ஒரு பேட்டியில், ஜோதிகாவுடன் மீண்டும் நடிக்க வேண்டும் என்ற எனது ஆசை கனவாகவே இருந்து வருகிறது. அது விரைவில் நனவாகும் என்று எதிர் பார்க்கிறேன். அதேசமயம் அப்படி நாங்கள் இணைந்து நடிக்கும் பட வாய்ப்பு என்பது தானாக அமைய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எந்த இயக்குநரிடத்திலும் எங்களுக்கேற்ற கதையை உருவாக்குங்கள் என்று நானாக கூற மாட்டேன் என்று கூறியுள்ளார் சூர்யா. மேலும் திருமணத்திற்கு முன்பு சூர்யாவும், ஜோதிகாவும் பூவெல்லாம் கேட்டுப்பார், உயிரிலே கலந்தது, காக்க காக்க, பேரழகன், மாயாவி, சில்லுனு ஒரு காதல் போன்ற படங்களில் நடித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# ராசியில்லாத நடிகையென முத்திரை குத்தினர்

தமிழ் சினிமாவில் தனக்கென்று ஒரு நிலையான இடத்தை வைத்திருக்கும் நடிகைகளில் கீர்த்தி சுரே/ம் ஒருவர். ரஜினி, விஜய், சூர்யா, சிவகார்த்திகேயன் உள்ளிட்ட முன்னணி நடிகர்களோடு இணைந்து நடித்துள்ள அவர் இடையில் நடிகையர் திலகம் திரைப்படத்துக்காக சிறந்த நடிகைக்கான தேசிய விருதைப் பெற்றார். அதன் பின்னர் பெண்குயின், சாணிக் காயிதம் மற்றும் ரகு தாத்தா போன்ற கதாநாயகிக்கு முக்கியத்துவம் கதைகளிலும் நடித்தார்.

இந்நிலையில் சினிமாவில் தன்னுடைய ஆரம்பகாலம் குறித்து பேசியுள்ள அவர் "நான் முதலில் ஒரு மலையாள படத்தில் நடிக்கத்தான் ஒப்பந்தம் ஆனேன். என் அம்மா போல் நடிகை ஆகப் போவதை எண்ணி மகிழ்ச்சியில் இருந்தேன். ஆனால் அந்த படம் கைவிடப்பட்டது.

அதன் பின்னர் நான் ஒப்பந்தமான வேறு இரண்டு படங்களும் பாதியிலேயே கைவிடப்பட்டன. இதனால் என்னை ராசியில்லாத நடிகை என்று முத்திரைக் குத்தினார்கள். அதை நினைத்தால் எனக்கு வேதனையாக இருக்கும். அது குறித்து பிரசாரமும் செய்தனர்.ஆனால் நான் முயற்சியைக் கைவிடவில்லை. தொடர்ந்து நல்ல படங்களில் நடித்து தேசிய விருது பெற்ற நடிகையாக உயர்ந்தேன்" எனக் கூறியுள்ளார்.

# மீண்டும் இணையும் சிவா–கார்த்தி

ஒளிப்பதிவாளரான சிவா தமிழில் சிறுத்தை படம் மூலமாக இயக்குநராக அறிமுகமானார். இதன் பின்னர் அஜித்தோடு இணைந்து நான்கு படங்கள் பணியாற்றி தமிழின் முன்னணி இயக்குநரானார்.

அதன் பின்னர் ரஜினியை வைத்து அண்ணாத்த படத்தை இயக்க, அந்த படம் தோல்விப் படமாக அமைந்தது.

இதையடுத்து சூர்யா நடிப்பில் கங்குவா படத்தை சிறுத்தை சிவா மிக பிரம்மாண்டமாக இயக்கினார் .

சிவாவின் அடுத்த படம் குறித்த தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.சிறுத்தை சிவா அடுத்து கார்த்தி நடிப்பில் ஒரு படத்தை இயக்க பேச்சுவார்த்தைகள் நடப்பதாக சொல்லப்படுகிறது.



# அனுஷ்காவின் 'காதி'

தென்னிந்திய சினிமாவில் உச்ச நடிகையாக இருந்தவர் நடிகை அனுஷ்கா. தனது கதாபாத்திரங்களுக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் இவர் தொடர்ந்து நடித்து வந்தார்.

அந்த மாதிரி கதைக்களங்களில் அவர் நடித்த அருந்ததி, ருத்ரமாதேவி போன்ற படங்கள் அனைவராலும் பாராட்டப்பட்டது. கடைசியாக பாகுபலி படத்தில் நடித்த அனுஷ்கா, அதன் பின்னர் பெரிதாக படங்களில் நடிக்கவில்லை. கடைசியாக அவர் தெலுங்கில் "மிஸ் ஷெட்டி மற்றும் மிஸ்டர் பொலிஷெட்டி' என்ற படத்தில் நடித்திருந்தார். இப்போது அனுஷ்கா இப்போது தனது 50 ஆவது படமான 'காதி' என்ற படத்தில் நடித்து வருகிறார்.இந்த படத்தை தெலுங்கு இயக்குனர் கிரிஷ் இயக்கி வருகிறார்.

இந்த படத்தின் முதல் லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது. இந்த போஸ்டரில் அனுஷ்க ரௌத்திரமான முகத்தோற்றத்தோடு கையில் சுருட்டை வைத்துக்கொண்டு இருப்பது போல போஸ்டர் வடிவமைக்கப்பட்டுள்ளது.



அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
பட்டு, பாரம்பரியம்,
யஸ்மின் சில்க்கவுஸ்
இவை மூன்றையும்
பிரிக்கவே முடியாது
நத்தார், புதுவருட
வாழ்த்துக்கள்
" என்றும் புதியது
ஆடைகள் என்றும் புதியது ! "
Tel: 02102 844744
HP: 0173 1937 325
'Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Kfz-Ingenieurbüro
NADANAM
Sachverständiger | Unfallgutachter
நத்தார், புதுவருட
வாழ்த்துக்கள்
SIE HATTEN EINEN UNFALL? WIR HELFEN!
வாகன விபத்தா? உங்களில் தவறு இல்லையா?
கட்டணம் எதுவுமின்றி நாங்கள் உதவுகிறோம்!
விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கான தொகையை
மிகக் குறுகிய காலத்துக்குள் மதிப்பீடு செய்து தருவோம்.
உடனே எங்களை நாடுங்கள்.
B.Eng. Diesanth Nadanapatham
0175 5086977


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Stuttgart நகரில்...
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
நத்தார், புதுவருட
வாழ்த்துக்கள்
Tel: 0711 615 8976/ 0170 334 4059


KANTHAN
JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
தரமான தங்க நகைகள்
புத்தம் புது டிசைன்களில்
எம்மிடம் கிடைக்கும்.
யேர்மனி டோட்மூண்ட் நகரில்
பொன் ஒளி வீசும்
காந்தன்
தங்க நகை
மாடம்
RHEINISCHE STR. 72 / 44137 / DORTMUND / GERMANY
0172 8684 203 / 0231 5898 7828 /
நத்தார், புதுவருட
வாழ்த்துக்கள்


நத்தார், புதுவருட
வாழ்த்துக்கள்
FRANKFURT நகரில் புதிய உதயம்
இலங்கை,
இந்தியாவிற்கான
விமான சிட்டைகள்
குறைந்தவிலையில் துரிதமாக
பெற்றுக்கொள்ள
TRUST TRAVELS Reisebüro
Mob: 017 645656520 Tel: 069 24 24 8079
Moselstr 33, 60329, Frankfurt am Main | Mail: trusttravelsffm@gmail.com
Inhaber : ஜெயக்குமார் வினோத்குமார்
TRUST TRAVELS
அத்துடன் துரித
பணப்பரிமாற்று
சேவையையும்
பெற்றுக்கொள்ளுங்கள்


Lido a Casa
...online bestellen auf
www.lidoacasa-ms.de
நத்தார், புதுவருட
வாழ்த்துக்கள்


Jaffna Super markt
Lebensmittel aus Asien, Afrika,China und Orient
WELCOME IM Jaffna SUPER.MARKT
எம்மிடம் நம்பி வாங்கோ!...
சந்தோசமாகப் போங்கோ!!...
Tel:0179 2310 560
Wolbecker Str.16a 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)